விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*


பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 30 செவ்வாய்க்கிழமை (12.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 114

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்படுகிறது

## உயிரோடு இருந்தபோது அற்புதங்கள் பல நிகழ்த்தியிருந்த பரிசுத்த பாப்பரசர்

### அவருக்கு புனிதர் பட்டம் வழங்குமாறு வத்திக்கானில் ஆர்ப்பரிப்பு



(ரோம்)

நடமாடும் தெய்மாகத் திகழ்ந்த பரிசுத்த பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பருக்கு புனிதர் பட்டம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இத்தாலியில் மட்டுமல்ல உலகம் பூராகவும் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது.

பாப்பரசர் உயிரோடு நடமாடிய காலத்தில் அற்புதங்கள் பல நிகழ்த்தியிருந்ததாக அவரது நித்திய இளைப்பாற்றியைத் தொடர்ந்து தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

பல வருடங்களாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் வத்திக்கானுக்குச் சென்று பரிசுத்த பாப்பரசரிடம் ஆசிபெற்ற கணத்திலிருந்து புற்றுநோய் குணமடைந்ததாக வத்திக்கானை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகின.

பெரும் செல்வந்தராக இருந்தும்கூட புற்றுநோயைக் குணப்படுத்தமுடியாமல் அவதிப்பட்ட அமெரிக்க செல்வந்தருக்கு பாப்பரசரிடம் இருந்து வெளிப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் இன்று மக்கள் பேரணி

(யாழ்ப்பாணம்)

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகளிடம் வழங்கக் கோரியும் சுனாமி அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக் கோரியும் இன்று தென்மராட்சியில் பேரணி நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப் பேரணி காலை 10 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி தென்மராட்சி பிரதேச செயலகத்தை சென்றடையும். அங்கு ஜனாதிபதி மற்றும் கண்காணிப்புக் குழுவினருக்கான மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

(ச-19)

# 'சுனாமி' பற்றிய விளக்கத்தை பெறுவதற்கு

# 24 எம்.பிக்கள் வெளிநாடுகளுக்கு பயணம்

## ஜனாதிபதியும் செல்வாராம்

(கொழும்பு)

அரசாங்க - எதிர்க்கட்சி எம்.பிக்கள் 24 பேர் சுனாமியை முன்கூட்டியே அறிவிக்கும் திட்டம் பற்றி விரிவான விளக்கத்தை பெறுவதற்காக இயற்கை அனர்த்த முகாமைத்துவ நிபுணர்கள் சகிதம் பல்வேறு நாடுகளுக்கும் சென்றுள்ளார்கள்.

4 பிரிவாக பிரிந்து ஜேர்மனி, ஜப்பான், அவுஸ்ரேலியா, துருக்கி போன்ற நாடுகளுக்கு அவர்கள் சென்றுள்ளார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை அதிகரிக்கக் கூடுமாம்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் அடுத்த சில தினங்களில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகமே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டினபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் முகாம் இருந்த தடயங்களைக் காணோம்

### துப்பு எதுவுமின்றித் திரும்பியது கண்காணிப்புக் குழு

## ஈ.பி.டி.பி. அமைப்பாளர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

ஈ.பி.டி.பியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவர் இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

அனர்த்த முகாமைத்துவ நிபுணர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா குழுவின் முகாம் இருந்த தடயங்களைக் காணோம்

## துப்பு எதுவுமின்றித் திரும்பியது கண்காணிப்புக் குழு

(பொலநறுவை)

பொலநறுவை வெலிக்கந்தைப் பிரதேசத்திலுள்ள தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம் இருக்கின்றது என்ற தகவல் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டதை யடுத்து கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்பாளர்கள் அங்கு சென்று திரும்பியுள்ளனர்.

இலங்கை இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரியொருவர் அவர்களை அங்கு அழைத்துச் சென்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. அமைப்பாளர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

ஈ.பி.டி.பியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

விஜயதாசன் விஜயேந்திரன் (வயது 30) என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

பிரஸ்தாப நபர் தனது நண்பர்களுடன் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சைக்கிளில் சென்று திரும்பிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழிலிருந்து மகனுடன் சென்ற கல்முனை வாசி சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை கல்முனைப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மணல்சேனை விபுலானந்த வீதியில் வசித்துவரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான சீவரத்தினம் அருளம்பலம் (வயது 44) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்து பாடசாலை விடுமுறையில் நின்ற நெல்லியடி மத்திய கல்லூரியில் ஆறாம் ஆண்டில் கல்வி பயிலும் தனது மகனை அழைத்துச் சென்ற அவர், பஸ்ஸிலிருந்து இறங்கி தனது வீட்டிற்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவரை வழிமறித்த இனந்தெரியாத இருவர் அவரிடம் இருந்து பயணப் பையையும், கையடக்கத் தொலைபேசியையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை வலியுறுத்தி நேற்று வவுனியாவில் பெரும் மக்கள் பேரணி



(வவுனியா)

நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி நேற்று வவுனியாவில் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி நடைபெற்றது.

இப் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். நிரந்தர சமாதானத்தை அடைந்து கொள்ள சமாதான முயற்சிகளை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும் என அங்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ச. குலதேவராசா தலைமையில் நடைபெற்ற இப் பேரணி தமிழ் மகா வித்தியாலயத்தில் இருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)




யாழ் கொழும்பு

EXPOAIR

your friend in the skies...

தினசரி விமான சேவை

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

T.P: 021 222 3891/6297, 0772 348888, 0772 349999

E-Mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

# பார்த்திப (புது) வருடப்பிறப்பு கருமங்கள்

## வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பு

பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13.04.2005) புதன்கிழமை முன்னிரவு 10.17 மணிக்கு பூர்வபட்ச பஞ்சமித் திகதியில் மிருகசீரிட நட்சத்திர இரண்டாம்பாதத்தில் விருச்சிக இலக்கினத்தில், மீன நவாம்சத்தில், சனி ஓரையில், சாத்வீக குணவேளையில் இப்புதிய பார்த்திப வருடம் பிறக்கின்றது. முன்னிரவு 6.17 மணி தொடக்கம் பின்னிரவு 2.17 மணிவரை புண்ணிய காலமாகும்.

## கைவிசேடம் - வாக்கிய பஞ்சாங்கம்

15-04-2005 வெள்ளி முற்பகல் 7.56. - 9.47 வரை

15-04-2005 வெள்ளி பிற்பகல் 12.10 - 2.05 வரை

## சங்கிரம தோச நட்சத்திரங்கள்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம், சித்திரை, சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள், அவிட்டம் இந்நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து வழிபாடு செய்தல்வேண்டும்.

## திருக்கணித பஞ்சாங்கம்

13.04.2005 பங்குனி மாதம் 31ஆம் திகதி புதன்கிழமை இரவு 12.39 மணிக்கு பார்த்திப வருடம் பிறக்கின்றது. அன்று பஞ்சமி திதியும், மிருகசீரிடம் 2ஆம் பாதம், உதய லக்கினம் தனுசும் கூடிய வேளையில் வருடம் பிறக்கின்றது.

## சங்கிரம தோச நட்சத்திரங்கள்

கார்திகை ரோகிணி, மிருகசீரிடம் சித்திரை, சுவாதி, விசாகம் அவிட்டம்.

## கை விசேடம் - திருக்கணித பஞ்சாங்கம்

14-04-2005 வெள்ளி முற்பகல் 6.34 - 7.22 வரை

14-04-2005 வெள்ளி முன்னிரவு 6.58 - 8.34 வரை

## புண்ணியகால கருமங்கள்

இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் கடப்பமிலையும், காலில் வேப்பிலையும் வைத்து ஸ்நானம் செய்து வெள்ளை சிவப்பு நிறமுள்ள பட்டாடையாயினும் அல்லது வெள்ளை சிவப்புக் கரையுடைய புதிய ஆடையாயினும் அணிந்து ஆபரணம், மலர்சூடி குலதெய்வ வழிபாடு செய்து பெரியோரை வணங்கி ஆசிபெற்று அறுசுவை உண்டிகளை உண்டு மங்களகரமாககச் சயனம் செய்க.

## மருத்து நீர் தயரித்தல்

தாழம்பூ, தாமரைப் பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழநீர், வில்வம், அறுகு , பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவற்றைச் சுத்தமான நீரிலிட்டு காய்ச்சிக் கொள்க.

## புதிய செயலாளர்

(காரைநகர்)

வேலணை பிரதேச சபையின் புதிய செயலாளராக கை.மகேந்திரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடந்த 12 வருடங்களாக நிதி உதவியாளராகவும், நிர்வாக உத்தியோகத்தராகவும் இவர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(7,246)

## ஜி.ரி.இசற் உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனை விவசாயிகளுக்கு மொத்தம் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களையும், இரண்டு தெளிகருவிகளையும் ஜி.ரி.இசற் நிறுவனம் வழங்கியுள்ளது.

குடத்தனை கலாசார மண்டபத்தில் கமக்கார சம்மேளன தலைவர் வி.இராசதுரையிடமும், அம்பன் கமக்கார சம்மேளன செயலாளர் என்.பத்மநாதனிடமும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் வைபரீதியாக இவற்றைக் கையளித்தார்.

இவற்றின்மூலம் அம்பன், குடத்தனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் நன்மையடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

(7-35)

## சேவைநலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் ஓய்வுபெறும் அதிபர் திருமதி ரதிதேவி சோதிலிங்கத்தின் சேவைநலன் பாராட்டுவிழா இன்று காலை 8 மணிக்கு பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு உப அதிபர் சி.சிவமலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ச)

# யாழ்.தொ.நு. கல்லூரி மாலைநேர வகுப்பு விரிவுரைகள் தொடர்ந்து நடக்க ஏற்பாடு

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாலைநேர வகுப்புக்களுக்கான விரிவுரைகள் அண்மைக்காலமாக ஒழுங்கானமுறையில் நடைபெறுவதில்லை எனக் குற்றஞ்சாட்டி யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் மாலைநேர வகுப்பு மாணவர்கள் நேற்றுமுன் தினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் கலாநிதி ரக் குணசேகரவுடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கிக்கூறினார்.

இதனையடுத்து இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய இணைப்பாளர் எஸ்.ஞானேந்திரன், பிரதம எந்திரியை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினது கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் மாலைநேர இறுதிவருட பொறியியல் மாணவர்களுக்கு விரிவுரைகளை ஆற்றுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், 48 நிரந்தர விரிவுரையாளர்கள் கடமையாற்றிய யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் தற்போது 13 நிரந்தர விரிவுரையாளர்களே உள்ளனர் என்றும், அவர்களிலும் தற்போது 3 பேர் ஓய்வுபெற்றதனால் 10 பேரே உள்ளனர் என்றும், இந்தப் 10 பேரில் 6 பேர் பொறியியல் விரிவுரையாயர்கள் என்றும், இவர்கள் தற்போது சுனாமி வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால் வர முடியாமல் உள்ளதென்றும் தெரிவித்தார்.

ஆனாலும் பல்வேறு இடங்களிலிருந்தும் மாணவர்கள் மாலைநேர வகுப்புக்கு வருகின்றபோது விரிவுரைகள் நடக்காமல் இருப்பது மாணவர்களைப் பாதிக்கக்கூடிய செயலாகுமாதலால்தான் தற்போது திறந்த பல்கலைக்கழகத்தின் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு விரிவுரையாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்தார்.

அத்தோடு திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில் அமைச்சர் பியசேன கமகேக்கு கடந்த மாதம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய தமிழ்மொழிமூல பொறியியல் பட்டதாரி விரிவுரையாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

(து-19)

# எரிபொருட்களின் விலை அதிகரிப்பு அபிவிருத்தியை மந்தமடைய செய்யும்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரித்துச் செல்வது நாட்டின் அபிவிருத்தி வேகத்தினை நேரடியாக மந்தமடையச் செய்வதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகள், நிறுவனங்கள் வழங்கும் நிதியுதவிகள் எண்ணெய் விலை அதிகரிப்பின் காரணமாக எண்ணெய்க் கொள்வனவுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் நாட்டில் அபிவிருத்திப் பணியை மேற்கொள்ளமுடியாதுள்ளது.

அமெரிக்காவின் தலைநகரான வோஷிங்டனில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி ஆகியவற்றின் கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக அங்கு செல்வதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வோஷிங்டனில் நடைபெறவுள்ள கூட்டத்தின்போது இலங்கையின் பொருளாதாரம், சுனாமி உதவி என்பன குறித்து பேச்சுவார்த்தை நடாத்தப்படும். முக்கியமாக அதிகரித்துச் செல்லும் எரிபொருள் விலை குறித்தும் பேசப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-8)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD,VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சிகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங் காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக , 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். T.P: 222 3226


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

1) யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம்பெறும் குடும்பங்களுக்கான 2005 ஏப்ரல், மே,யூன் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ.சாங்கங்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 ஏப்ரல் (MT) | 2005 மே (MT) | 2005 யூன் (MT) |
| 01. | சாவகச்சேரி | 90 | 90 | 90 |
| 02. | கைதடி | 30 | 30 | 30 |
| 03. | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 04. | உடுப்பிட்டி | 10 | 10 | 10 |
| 05. | கட்டைவேலி - நெல்லியடி | 10 | 10 | 10 |
| 06. | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 07. | புலோலி | 10 | 10 | 10 |
| 08. | மருதங்கேணி | 10 | 10 | 10 |
| 09. | யாழ்ப்பாணம் | 85 | 85 | 85 |
| 10. | நல்லூர் | 25 | 25 | 25 |
| 11. | அச்சுவேலி | 30 | 30 | 30 |
| 12. | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13. | மானிப்பாய் | 20 | 20 | 20 |
| 14. | பண்டத்தரிப்பு | 20 | 20 | 20 |
| 15. | அளவெட்டி - மல்லாகம் | 10 | 10 | 10 |
| 16. | தெல்லிப்பளை | 75 | 75 | 75 |
| 17. | சங்கானை | 40 | 40 | 40 |
| 18. | சுன்னாகம் | 30 | 30 | 30 |
| 19. | புங்குடுதீவு - நயினாதீவு | 20 | 20 | 20 |
| 20. | வேலணை | 20 | 20 | 20 |
| 21. | ஊர்காவற்றுறை | 30 | 30 | 30 |
| 22. | காரைநகர் | 20 | 20 | 20 |
| 23. | தீவகம் | 05 | 05 | 05 |
| 24. | நெடுந்தீவு | 05 | 05 | 05 |
| | மொத்தம் | 800 | 800 | 800 |

2) கேள்விப்பத்திரத்தில் கோரப்பட்ட முழுத் தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வதென்பது தேவைக்கேற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

3) கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா500/=யை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.04.11 ஆம் திகதி தொடக்கம் 2005.04.26 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்ததந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

4) மீளளிக்கமுடியாத கேள்விவைப்புகளாக ரூபா500/=ஐ அந்ததந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5) கேள்வி கோரப்படவுள்ள அரிசி, புழுங்கல் அரிசியாக இருத்தல்வேண்டும் என்பதுடன், அவை கேள்விபற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

6) பூரணப்படுத்திய இருகேள்விப்படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபாலுறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 27.04.2005 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல்வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

7) கேள்விப்பத்திரத்தின் தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

8) கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூசங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைக் சமர்ப்பிப்பதற்கும், அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

9) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10வீத மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல்வேண்டும்.

10) கேள்விகள் பரிசிலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை, மாவட்ட விலை நிர்ணயசபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல்கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோகவிலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.


**க.கணேஷ்**

தலைவர்/அரச அதிபர்,

மாவட்ட கேள்விச்சபை /மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம்.

11.04.2005. (சி-1224)

# குழந்தைகளைப் பாதிக்கும் மஞ்சட் காமாலை



மஞ்சட்காமாலை என்பது உடலின் தோல் மஞ்சள் நிறத்திலும் கண்கள் வெள்ளை நிறத்திலும் இருப்பதைக் குறிப்பதாகும். இதனை (Jaundice) என்று அழைக்கிறார்கள். புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு இது ஏற்படுவதால் இதனை New Bron Jaundice என்று அழைக்கிறார்கள்.

பைலூரூபின் என்ற நிறமி அதிகமாக இருப்பதால் மஞ்சட் காமாலை உண்டாகிறது. பைலூரூபின்கள் இரத்த சிவப்பு அணுக்களில் ஏற்படும் பழுது காரணமாக உருவாகிறது. ஆனால் வழக்கமாகப் புததாகப் பிறந்த குழந்தையின் ஈரல்குலை பைலூரூபின்களை அழித்துவிடுகிறது. சிலசமயம் புதிதாக பைலூரூபின் உருவாகும்வரை அனைத்து பைலூரூபின்களையும் துடைத்து எடுத்துவிடும் இயற்கையான இந்தச் செயல்பாட்டில் முரண்பாடுகள் ஏற்படுவதன் விளைவுதான் மஞ்சட் காமாலை. மஞ்சட் காமாலையின் பிசியோலாஜிக்கல் மஞ்சட காமாலை, போதலாஜிக்கல் மஞ்சட் காமலை, ஜான்புஸ் ஒப் பிரிமெக்சூரிட்டி, பிரெஸ்ட் மில்க் ஜான்டில் எனப் பலவகைகள் உள்ளன.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 56

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

இளம் ஹீரோக்களில் ஒருவரான இவர், ஸ்டுடண்ட் நம்பர் 1 ஆக வந்தவர். சீனியர் நடிகரான தனது தந்தையுடனும் பல படங்களில் கலக்குபவர். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-



**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 56**
**வலம்புரி ~ சங்குநாதம்**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை.**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதியவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-56**

படத்தில் உள்ளவரின் பெயர் :-.............................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-.............................
அனுப்புபவரின் முகவரி :-.............................
.............................
.............................

# உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் ஃபோலிக் அசிட்

ஃபோலிக் அசிட் (Folic Acid) அதிகமாக எடுத்துக்கொள்வதன்மூலம் பெண்களுக்கு, குறிப்பாக இளம் பெண்களுககு உயர் இரத்த அழுத்த நோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் குறைகிறது. இது குறித்து செய்யப்பட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது என்னவெனில் அதிகமாக ஃபோலக் அசிட் மாத்திரைகளை உட்கொள்வதும் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் என்பதே.

அமெரிக்காவில் உள்ள பிரிகாம் மற்றும் மகளிர் மருத்துவமனை மற்றும் ஹார்வாட்ட மருத்துவம் பற்றி ஆய்வாளர்கள் 27 முதல் 44 வயதுடைய 94,000 பெண்களை ஆய்வு செய்த போது, முதலில் அவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருந்திருக்கவில்லை. இவர்களின் உணவுப் பழக்கவழக்கத்தைக் கேள்வி - பதில் அட்டவணைமூலம் தெரிந்துகொண்டதில் எவ்வளவு ஃபோலிக் அசிட் இவர்களின் உடலில் சேர்கிறது என்ற தகவலை முதலில் பெற்றனர். அதன்பிறகு 8 ஆண்டுகள் இவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வந்ததில் 7,373 பெண்களுக்கு இரத்தக்கொதிப்பு நோய வளர்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு நாளைக்கு 1000 மைக்ரோ கிராமகள் ஃபோலக் அசிட் உட்கொணட பெணகளுக்கு இரத்தக்கொதிப்பு வாய்ப்பு மிகவும குறைவாகவே இருந்துள்ளது.

மாறாக நாளொனறுக்கு 200 மைக்ரோ கிராம்களுக்கு குறைவாக ஃபோலிக் அசிட் உட்கொண்டவர்களுக்கு இரத்தக் கொதிப்புச் சாதியம் அதிகம் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது.

நடுத்தர வயது மற்றும் 60வயதிற்கு மேற்பட்டவர்களிலே இதே பரிசோதனை நடத்திய போதும் ஃபோலிக் அசிட்டின் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைப்புச் செயல்பாடு தெரியவந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தினசரி உணவுப் பழக்கத்திலேயே பெறப்படும் ஃபோலிக் அசிட் சத்துக்களைவிட வெளியிலுந்து உடலுக்குக் கூடுதலாகச் செலுத்தப்படும் ஃபோலிக் அசிட் மருந்து மாத்திரைகளாலேயே இச்சத்துப் பெருகுகிறது.

ஏனெனில், மாத்திரைகளால் பெறப்படும் ஃபோலிக் அசிட் உடலில் உடனடியாக ஏற்கப்படுகிறது என்று இத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 54

**சரியான விடை**




நடிகா ஜெமினிகணேசன்

**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 54இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :~ | கை.தாரணி<br>சுன்னாகம் தெற்கு,<br>சுன்னாகம். |
| இரண்டாம் பரிசு | :~ | M.ரஜீவன்<br>கைதடி வடக்கு,<br>கைதடி. |
| மூன்றாம் பரிசு | :~ | T.S.சயந்தன்<br>அரசடி வீதி,<br>வட்டுதெற்கு,<br>வட்டுக்கோட்டை. |

## சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

வே.சுபாஷினி, மானிப்பாய். V.தனேஸ்குமார், பருத்தித்துறை. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். தெ.விதுசன், யாழ்ப்பாணம். ஆ.கஜீபன், மானிப்பாய். வீ.நடராசா, வேலணை. ஆ.சுபோ, மானிப்பாய். தி.வயனரூபி, யாழ்ப்பாணம். ச.சதீஸ்ராஜ், மானிப்பாய். கு.விஜயகுமார், திருநெல்வேலி. செ.இந்துஜா, பருத்தித்துறை. P.அன்ரன் ஜெயக்குமார், யாழ்ப்பாணம். வி.அனிஸ்ரா, ஊர்காவற்றுறை. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. த.வைகுநதன், சுன்னாகம். த.இந்தினேஸ்வரன், சண்டிலிப்பாய். இ.சிவனேஸ்வரன், யாழ்ப்பாணம். யோ.லனோஜா, கொடிகாமம். தே.கார்த்தீபன், கரவெட்டி. கு.யனனி, புலோலி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. செ.புஸ்பலதா, சங்கானை. வே.மாலினி, றொட்டியாலடிமுகாம். திருமதி.P.S.ராணி, வட்டுக்கோட்டை. இ.டெனிஸ்ரன், ஊர்காவற்றுறை. கு.தாரணி, சாவகச்சேரி. சி.கனேஸ், பொற்பதி. க.கபிலன், நீர்வேலி. த.யோகராசா, கொடிகாமம். R.இராஜகாந்தி, கொக்குவில்.



# புற்றுநோய் வராமல் தடுக்கும் தர்பூசணி

கோடைகாலம் தொடங்கிவிட்டது. சுட்டெரிக்கும் வெயிலில் தவிக்கும் நமக்கு இந்தத் தர்பூசணிப் பழம் சாப்பிடுவது அதிகரித்துவரும் தாகத்தைக் குறைப்பதோடு, நமது உடலுக்குக் குளிர்ச்சியையும் தருகிறது. தர்பூசணி பழங்களில நமது உடலுக்கு நன்மை பயக்கும் பல அம்சங்கள் உள்ளன என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. தர்பூசணி பழத்தில் அதிக அளவில் எலக்ட்ரோலைட்ஸ் (சோடியம் மற்றும் பொடடாசியம்) உள்ளது. இந்தப் பழத்தைச் சாபபிடுவதன் மூலம் வியர்வையினால் நமக்கு ஏற்படும இழப்பை இது ஈடுசெய்கிறது. நிறையச் சதைப் பற்றைக் கொண்டுள்ள இந்தப் பழத்தில் குறைந்தளவே கலோரிச்சத்து உள்ளது.

அதேநேரத்தில், அதில் உள்ள சத்துக்கள் அனைத்தும நமது உடலுக்கு உறுதி தருவதாக உள்ளன. தர்பூசணி பழத்தில் உள்ள லைகோபெனி, புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது. லைகோபெனி அதிகளவில உள்ள பொருட்களான தக்காளி மற்றும் தக்காளி சார்ந்த பொருட்களைச் சாப்பிடுவதன் மூலம் புராஸ்டேட் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன என்று ஹார்வர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள தெரிவித்துள்ளனர்.

இந்த லைகோபெனி சத்தே, பழங்கள் மற்றும் காய்கறிகளுக்குச் சிவப்பு வண்ணத்தைக் கொடுக்கின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தர்பூசணி பழத்தில் அதிகளவு லைகோபெனி (இரண்டு கப் தர்பூசணி சாரில் 15 முதல் 20 மில்லிக்கிராம) உள்ளது. மற்ற காய்கறிகள் மற்றும் பழங்களில் உள்ளதைவிட இதில அதிக அளவில் உள்ளது.

தர்பூசணி பழம் விற்றமின் ஏ, பி6 மற்றும் சி, சத்துக்களையும் கொண்டுள்ளது. தர்பூசணி பழம் மற்றும் சாறை காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு என எவற்றுடனும் சேர்த்துச் சாப்பிடலாம் இல்லையெனில், மற்ற நேரங்களில அதை கூழாக்கி அதன் மீது லேசாகச் சர்க்கரை தூவிச் சாப்பிடலாம்.

இந்தப் பழத்தில் 92 சதவீத அளவிற்குத் தண்ணீர்ச் சத்து உள்ளது. மிகவும் கடினமான, வெண்மை நிறமான, அல்லது வெளிறிய பச்சை நிறமான பழங்களை வாங்காதீர்கள். அதில் அசிட் அதிகளவில் இருக்கும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துண்டு தர்பூசணி பழம் சாப்பிட்டால், உங்களுக்கு வியர்வை மூலம் ஏற்படும் சோர்வு அகன்று புத்துணர்வு பெறுவீர்கள்.

## இன்று ஒரு தகவல்

# யார் பெரியவர்

"ஐந்து விரலும் ஒரே மாதிரியாகவா இருக்கிறது?" என்று ஒரு உதாரணம் சொல்வது உண்டு. அதாவது இந்த உலகத்தில் வேறுபாடுகள் இருக்கத் தான் செய்யும். அதற்காக ஒருவருக்கொருவர் சண்டை போடக்கூடாது என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

ஒரு முறை இந்த ஐந்து விரலுக்குமிடையே சண்டை வந்து விட்டதாம். யார் பெரியவர் என்ற சண்டை. கட்டைவிரல் பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் அதுதான் முதலில் பேச ஆரம்பித்தது. உயரம் தான் அதற்குக் குறைவே தவிர வாய் நீளம் போலிருக்கிறது. அது கூறியது என்ன தெரியுமா? நான் குட்டையாக இருப்பதாக எல்லோரும் சொல்கிறீர்கள்! அகத்தியர் கூட என்னை மாதிரி குட்டையாகத்தான் இருந்தார். இருந்தாலும் அவருக்குள்ள சக்தி வேறு யாருக்கு உள்ளது.

பார்வதி திருமணம் நடந்த சமயத்தில் எல்லோரும் வடக்கே போய் கூடிவிட்டார்கள். அப்போது இந்த பூமியே வடக்கே அழுந்தி தெற்கே உயர ஆரம்பித்துவிட்டது. அதை சரி செய்ய அகத்தியரை மட்டும் பரமசிவன் தெற்கே அனுப்பிவைத்தார். பூமி சமமாகிவிட்டது. அப்படியென்றால் அவரது வெயிட் என்னவென்று புரிந்து கொள்ளவேண்டும். அது போல் தான் கையில் நான் இருக்கிறேன். ஏதாவது ஒரு பொருளைத் தூக்க வேண்டுமென்றால் நான் ஒரு புறமும் நீங்கள் நால்வரும் இன்னொரு புறமும் நிற்க வேண்டியுள்ளது அதனால் நான் தான் பெரியவன் என்றது கட்டைவிரல்.

இதைக் கேட்டவுடன் மற்றைய நான்கு விரலும் சும்மா இருக்குமா? அவற்றிற்கும் கௌரவப் பிரச்சினை இருக்கிறதல்லவா? ஆள் காட்டிவிரல் நிமிர்ந்து நின்றது. இதோ பாருங்கள்! யாரைச் சுட்டிக் காட்டவேண்டுமானாலும் நான்தான் தேவைப்படுகிறேன்.அதனால் நான்தான் பெரியவன் என்றது அது சொல்வதும் நியாயம் தானே. "மேலத்தெருவுக்கு எந்த வழியாகப் போகவேண்டும்?" என்று கேட்டால் இதோ இந்த வழியாகப் போங்கள் என்று கட்டை விரலாலா காட்டுகிறோம்? அப்படிக் காட்டினால் ஏதோ அபிநயம் பிடிக்கிறோம் என்று நினைப்பார்கள்.

அடுத்ததாக நடுவிரல் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் சாவகாசமாக எழுந்து நின்றது. 'எதற்கு வீணாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்... எல்லோரும் எழுந்து நில்லுங்கள் யார் உயரம்? என்று அளந்து பார்ப்போம் அப்படிப் பார்த்தால் நான்தானே பெரியவன் என்றது.

அடுத்ததாக மோதிரவிரல் சும்மா இருக்குமா? அதன் மீது போட்டிருந்த தங்கமோதிரத்தை எல்லோர் கண்ணிலும் படக்கூடிய மாதிரி அப்படியும் இப்படியும் திருப்பிக்காட்டியது. 'ஒரு மனிதன் தான் மிகவும் பெரியமனிதன், வசதியானவன் என்று காட்டிக்கொள்வதற்கு மோதிரம் போடுகிறான். அப்படி மோதிரம் போடுவதற்கு உங்களிடம் யார் வருகிறான்? என்னிடம் தான் வருகிறான். எனக்குத்தான் போடுகிறான். விலை உயர்ந்த பொருட்களையெல்லாம் நம்பிப்போடுவதற்கு நான் தான் பொருத்தம் என்பதை மனிதனே புரிந்து வைத்திருக்கிறான். அப்படி இருக்கும்போது நீங்கள் அதைச் சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டால் எப்படி?' என்றது மோதிர விரல்.

நான்கு விரலும் தமக்குப் பொருத்தமான குறிப்புக்களைக் கூறிவிட்டன. கடைசியாக மிச்சமிருந்தது பாவம் அந்த சுண்டு விரல் தான். பரிதாபமாக நின்றது. நான் தான் பெரியவன் என்று சொல்லிக் கொள்ள அதற்கு ஒரு பிடியும் கிடைக்கவில்லை. அது அழுது கொண்டே கடவுளிடம் சென்றது. தனது நிலைமையைக் கூறியது. கடவுளும் அதன் காதோடுகாதாக ரகசியமாக ஏதோ ஒன்றைக் கூறி அனுப்பினார்.

சுண்டுவிரல் தைரியமாகத் திரும்பி வந்தது. மற்றைய விரல்களைப் பார்த்துக் கூறியது உங்கள் எல்லோரையும் விட நான் தான் பெரியவன். இதில் உங்களுக்குச் சந்தேகமே வரவேண்டியதில்லை. கோவிலுக்குப் போய் சாமி கும்பிடுகிறோம். இரண்டு கைகளையும் கூப்பி கடவுளைக்கும்பிடும் போது நான் தான் உங்கள் எல்லோருக்கும் முன்னால் நிற்கிறேன். அதனால் ஆண்வடனுக்கு மிகவும் பக்கத்தில் இருப்பது நான்தான் என்றது.

இந்த உண்மையை மற்ற விரல்களும் ஒத்துக் கொண்டன. யார் இறைவனுக்கு அருகில் நிற்கின்றனரோ அவர்கள் தான் பெரியவர்கள். இதில் ஒரு முக்கியமான தத்துவம் என்னவென்றால் சுண்டு விரலுக்கு நான்தான் பெரியவன் என்ற எண்ணம் தானாக வரவில்லை அது தான் வெற்றியின் ரகசியம்.

நான் தான் பெரியவன் என்று நினைத்துக் கொண்டிருந்த இரண்டு பேர் ஒரு நாள் காலையில் நடைப்பயிற்சியின் போது எதிரெதிரே சந்தித்துக் கொண்டனர். ஒருவர் கேட்டார் "ஏனப்பா நீ தான் நடந்து போகிறாய் இந்தக் குரங்குக் குட்டியையும் ஏன் கூட்டிக்கொண்டுபோகிறாய்?" என்றார். அடுத்தவருக்குக் கோபம் வந்துவிட்டது.

"ஏனப்பா உனக்குக் கண்தெரியவில்லையா? இது குரங்குக்குட்டி இல்லை! நாய்க்குட்டி நன்றாகப் பார் என்றார். அதறகு இவர் நான் கேட்டது உன்னிடமில்லை அந்த நாய்க்குட்டியிடம் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிரான்ஸ் நாட்டுக்கு விசா பெறுவதற்கான

# 10விரல் அடையாள நடைமுறையை அமைச்சர்களும் கடைப்பிடிக்கவேண்டும்

(கொழும்பு)

ஏனைய இலங்கையர்களைப் போலவே அமைச்சர்களும் பிராஸ் நாட்டுக்கான விசா பெறுவதற்கு தமது 10 விரல் அடையாளங்களையும் வழங்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சாத்த அடிப்படையில் கடந்த புதன் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்த நடைமுறையில் மாலிக்கு பின் இலங்கை இரண்டாவது நடாகும்.

இந்த நடைமுறைக்கு உட்படுத்தப்பட்ட முதலாவது அமைச்சர் சரத் அமுனுகம. இவர் கடந்த வெள்ளியனறு விசாபெறுவதற்காக பிரான்ஸ் தூதரகத்திற்கு சென்றவேளை, 10 விரலடையாளங்களும் பெறப்பட்டன.

இப்புதிய நடைமுறை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்படுவதை விடமுற்றிலும் வேறுபட்டது. இத்தகைய இலத்திரனியல் விசா நடைமுறை இலகுவானதாகவும் விரைவானதாகவும் இருககும் என பிரான்ஸ் தூதரக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இப்புதிய நடைமுறை விரைவில் 15ஐரோப்பிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும் இந்த நடைமுறையானது ஆபிரிக்காவில் ஒருநாட்டிலும் ஆசியாவில் ஒரு நாட்டிலும் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி எமது நாடு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் எந்தவித குற்றச் செயல்களும் இடம்பெறாது என்றும், இது பற்றி இலங்கையின் வெளிநாட்டமைச்சிற்கு விபரமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 3ஆயிரம் இலங்கையர்கள் பிரானஸிற்கு வருடமொன்றிற்கு பயணம் செய்கின்றனர். (க-6)

## இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின்

# கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் பொதுக் கட்டமைப்பை உருவாக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில், பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் அரசு மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. இதற்கு ஜே.வி.பி.யும் இணங்கியுள்ளதாக அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவலை கசியவிட்டுள்ளன.

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத் தொடர் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிகவரை கண்டியில் நடைபெறவுள்ளது.

இக்கூடடத்திற்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் விசேட அதிதியாக அழைக்கப்பட்டுள்ளார்.

இக்கூட்டத் தொடரின்போது சுனாமிப் பேரலைக்குப் பின்னரான நிதிவருகை தொடாபாகவும் தேவைப்படும் நிதி தொடர்பாகவும் நிதியமைச்சர் சரத் அமுனுகம அறிக்கை சமப்பிக்கவுள்ளார்.

இதற்கிடையில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு விஜயம் செய்து இருதரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வெளிநாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடச் சென்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழு எதிர்வரும் 17ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனா.

அவர்கள் நாடுதிரும்பியவுடன் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இறுதி முடிவுகளை எரிக்சொல்ஹெயம் ஊடாக பரஸ்பரம் அறிவிக்கப்படவுள்ளது.

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக இம்முறை சாதகமான முடிவுகளை இருதரப்பினர்களும் அறிவிககக் கூடுமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## சுனாமி பேரலையால் பெற்றோரை இழந்த

# சிறுவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிடாதோருக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி பேரலை தாக்கத்தினால் பெற்றோரை இழந்த சிறுவர்கள் தொடாபான தகவல்களை வெளியிடாது தமது பொறுப்பில் சிறுவர்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நீதி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இத் தகைய தகவல்களை மறைக்கும் ஒவ்வொருவரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள் என நீதியமைச்சர் டபிள்யூ பி.ஜே. ஜோன் செனவிரத்தின தெரிவிக்கின்றார்.

இவ்வாறான நபர்களுக்கு எதிராக செயற்படக் கூடிய வகையில் புதிய சட்டக்கோவை ஒன்றை உள்ளடககிய சட்டமூலம் ஒன்றை நீதி அமைச்சர் பி.ஜே.ஜோன்செனவிரத்தின பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இப்புதிய சட்டங்களுக்கு அமைய இவ்வாறான நபர்களுககு இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க-9)

## நிவாரணம் கிடைக்காததால் கரவெட்டி மீனவர்கள் சிரமம்

(கரவெட்டி)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட கரவெட்டி பிரதேச மீனவர்களுக்கு போதிய நிவாரணமோ மற்றும் அரச சார்பறற நிறுவனங்களின் உதவிகளோ கிடைக்காததால இவர்கள் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரவெட்டி பிரதேச மீனவர்கள் தொண்டைமானாறு கடல் நீரேரியிலும் மற்றும் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி, வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியிலும் வீசசு வலைகளைக் கொண்டும் தூண்டில் மூலமும் மீன்பிடித தொழிலிலை செய்துவந்துள்ளனர்.

ஆழிப் பேரலையினால் மீனவர்களுடைய தூண்டில்கள், வச்சு வலைகள் யாவும் கடலுடன் அள்ளுணடு போய்விட்டதால், அவர்கள் தொடாந்து தமது தொழிலிலை மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர்.

இப்பகுதி மக்களுக்கு சுனாமி முத்திரையை தவிர வேறு எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை என கவலை தெரிவித்துள்ளனர். ஆகவே அரசசார்பற்ற நிறுவணங்கள் உதவிகளை செய்ய முன்வர வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (7-35)

## மீளக் குடியமர்த்துமாறு மக்கள் கோரிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நாகர்கோயில் கிழக்கு, மேற்கு, தெற்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி பகுதிகளில் அகதி முகாம்க்ளில் வாழும் மக்கள் தங்களை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதியிலிருந்து வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் வசித்து வருகின்றனர். அகதிகள் முகாம்களிலும் வீடுகளிலும் அடிப்படைவசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

இப்பகுதி உயர்பாதுகாப்பு வலயம என்ற போர்வையில் எம்மை அப்பகுதியிலிருந்து வெளியேற்றியதால் அகதிகளாக கடந்த 4 வருடங்கள் வாழ்ந்து வருகிறோம்.

சுனாமி அனர்த்தங்களால் நாம் சேர்த்த எமது சொத்துக்களையும் தொழிலையும் கூட இழந்து விட்டோம். ஆகவே எமது நிலையை உணர்ந்து எம்மை எம் பிரதேசத்திற்கு மீளக் குடியமர்த்த ஆவன செய்யுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் மறறும் அரச அதிகாரிகளிடமும் கோரிக்கை வடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-35)

# நீரிழிவு நோயின் தாக்கத்தை அதிகப்படுத்தும் மன இறுக்கம்

**மருத்துவ விளக்கம்**

டாக்டர் கே.தர்மகிருஷ்ணராஜா

நோய்கள் பலவிதம். பல உடலுறுப்புக்களைச் சார்ந்தவை. சில மனநிலையைச் சார்ந்தவை. ஒருவருக்கு உடல் உபத்திரங்கள் மட்டுமின்றி அவரது மன நிலையும் நலமாக இருந்தால் தான் அவர் முழுமையான ஆரோக்கியத்திலிருக்கிறார் எனலாம்.

மனம் சார்ந்த நோய்கள் பல விதம். அவற்றுள் மன இறுக்கம் தற்சமயம் சகஜமாகக் காணப்படுகின்ற ஒரு குறைபாடு. 12 முதல் 20 சதவிகிதத்தினர் மன இறுக்கத்தினால் அவதிப்படுவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பலருககு இக் குறைபாடு தமக்கு இருப்பதே தெரிவதில்லை. தெரிந்திருந்தாலும் முறையான மருத்துவ உதவிகள் கிடைப்பதில்லை. நீரிழிவு நோயுள்ளவர்களும் இதற்கு விதி விலக்கல்ல. மற்றவர்களை விட இதய நோயுள்ளவர்களும், நீரிழிவு நோயுள்ளவர்களும் மன இறுக்கத்தினால் அதிக அளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

## மன இறுக்கத்தின் அறிகுறிகள்

மன்வருத்தம், புத்துணர்ச்சியின்னை, மகிழ்ச்சியின்மை, உறக்கமின்மை, எரிச்சலுணர்வு, பய உணர்வு, ஞாபக மறதி, கவனமின்மை, பசியின்மை, உணவின் மேல் நாட்டமின்மை, செரிப்புத்தன்மை குறைவு, உடல் வலி, சோர்வு, தலைவலி, உடல் மெலிவு, குற்ற உணர்வு, தேவையின்றி மன உளைச்சல், அழுகை, கோபம், கவலை, தற்கொலை நினைப்பு, சகிப்புத்தன்மை, சமுதாய ஈடுபாட்டுணர்வின்மை, பாலுணர்வுக் குறைவு போன்றவைகள் மன இறுக்கத்தின் பொதுவான அறிகுறிகள்.

குறிப்பாக மன வருத்தம் மகிழ்ச்சியின்மை இவற்றுள் ஏதாவது ஒன்றும், உடல் மெலிவு, எடை அதிகரித்தல், தூக்கமின்மை எரிச்சலுணர்வு, சோர்வு, நாட்டமின்மை, தற்கொலை எண்ணம் இவற்றுள் நான்கும் இருப்பின் ஒருவருக்கு மன இறுக்கம் உள்ளதை நிர்ணயிக்கலாம். இவ்வறிகுறிகள் நாள்தோறும், குறிப்பாக இரண்டு வாரங்களுக்கு மேல் காணப்பட்டாலும், பிற நோய்களின் காரணமாக இவ் வறிகுறிகள் தோன்றவில்லை என்பதை உறுதி செய்யப்படும் போதும் அவருக்கு நிச்சயமாக மன இறுக்கம் உள்ளதாகத் தெளிவுபட நிர்ணயிக்கலாம்.

## மன இறுக்கத்திற்கான அபாய முன்காரணிகள்

பாரம்பரியம், உடல் இயக்கக் கோளாறுகள், சூழ்நிலை மாற்றங்கள் முதலியன மன இறுக்கம் தோன்றுவதற்கு அடிப்படை காரணங்கள். இளமை, பெண்பால், வறுமை, மணவாழ்க்கை முறிவு, உறவினர்களின் ஒத்துழைப்பின்மை மற்றும் அலட்சியப் போக்கு, எதிர்பாராத விபத்துக்கள், இழப்புகள், இறப்புகள், மன அதிர்ச்சியளிக்கும் நிகழ்வுகள், தன்னம்பிக்கையின்னை, நாள்பட்ட நோய்கள், அவசர வாழ்க்கை முறை, திட்டமிட்டு செயல்படாமை போன்றவைகள் மன இறுக்கத்தை வரவழைக்கும் அபாய முன்காரணிகள். மன இறுக்கமும் நீரிழிவு நோயும் நெருங்கிய தொடர்புடைய குறைபாடுகள். மன இறுக்கம் நீரிழிவு நோய் வருவதற்கும் நோயின் தாக்கம் தீவிரமாதவதற்கும் காரணமாகிறது. அதுபோல் நீரிழிவு நோயுள்ளவர்கள். மற்றவர்களைவிட இருமடங்கில் (சுமார் 30%) மன இறுக்கத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். முறையான சர்க்கரைக் கட்டுப்பாடு மன இறுக்கத்தைக் குறைப்பதும் மன இறுக்கச் சிகிச்சை முறைகள் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதும் தற்சமயம் மருத்துவ ஆய்வுகள் கண்டறிந்துள்ள உண்மைகள். குறிப்பாக மன இறுக்கம் நீரிழிவு நோய் சார்ந்த நரம்புப் பாதிப்புகளையும், இதய நோய்களையும் வெகுவாக உயர்த்துவதாக சமீபத்திய ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

## மன இறுக்கம் நீரிழிவு நோய்வரக் காரணமாதல்

மன இறுக்கம் காணப்படுகின்ற சமயங்களில் உடலில் சில உடலியக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன். அப்போது உடலில் சில இயக்குநீர்கள் சுரக்கின்றன. 'அட்ரீனலின்', 'நார் அட்ரீனலின்', 'குளுகோன்' 'கார்டிசனால்', வளர்ச்சி இயக்கு நீர் போன்றவைகள் இவற்றில் அடக்கம்.

இந்த இயக்கநீர்கள் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும். 'இன்சுலினுக்கு' எதிராகச் செயுல்படுபவை. இவைகளின் செயல் திறன் காரணமாக இன்சுலின் செயல்திறன் குறைந்து இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகி நீரிழிவு நோய் ஏற்பட்டு விடுகின்றது.

சிலருக்கு மன அழுத்தம் ஏற்படும் சமயங்களில் மட்டும் நீரிழிவு நோய் தோன்றி, அந் நிலைமாறியவுடன் வந்த வேகத்திலேயே மறைந்து விடும். இதனை 'உணர்ச்சி அழுத்த நீரிழிவு நோய்' என்றழைப்பார்கள். இவர்களுக்குப் பிற்காலத்தில் நீரிழிவு நோய் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் என்பது அறிவியல் உண்மை.

## மன இறுக்கம் ஏற்படுத்தும் விளைவுகள்

மன இறுக்கத்தால் வரும் சோர்வும், நாட்ட மின்மையும், செரிமானக் கோளாறுகளும் உடலுழைப்பைக் குறைத்து, உடற்பருமனை அதிகரிக்கச் செய்து நீரிழிவு நோயின் கடுமையை உயர்த்துகின்றன.

மன இறுக்கத்தின் போது உடலில் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்ட கொழுப்புகளை எரித்துப் பயன்படுத்துவது அதிகமாகிறது. இதனால் கொழுப்பு அமிலங்கள் அதிக அளவில் உண்டாகிக் கெட்ட விளைவுகள் ஏற்படுகின்றன.

அதிக மன இறுக்கம் உடலின் தானியங்கி நரம்பு மண்டலம் மற்றும் நோயைத் தடுக்கும் நிணநீர் மண்டலம் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி உடலின் நோய் எதிர்ப்புத்திறனை வலுவிழக்கச் செய்கிறது. இதனால் எளிதில் நோய்த் தொற்றுகள் தோன்றிக் கெடுதல் ஏற்படுகின்றன.

நீரிழிவு நோய் கண்டவர்களிடம் ''இன்சுலினிக்கு எதிர் இயக்கு நீர்கள்'' இன்சுலினின் செயல்திறனைக் குறைப்பதால் இன்சுலினின் தேவை அதிகமாகும் நிலை ஏற்படுகின்றது. இவர்களுக்கு ஏற்கனவே இன்சுலினின் அளவு குறைந்து இருப்பதால் நோய முற்றி அல்லல்பட வேண்டியுள்ளது.

''வாழ்நாள் முழுவதும் கூடியிருந்து தொல்லைகள் தரக் கூடிய நோயால் பாதிக்கப்பட்டுள்ளோம்'', ''மற்றவர்களைப் போல் சகஜமாக வாழ முடியவில்லையே'', சிகிச்சைக்கு ஆகும் செலவினங்களுக்கு மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளதே போன்ற மன உளைச்சல்கள் நீரிழிவு நோயாளிகளிடம் சகஜம். இம் மாதிரியான நெடு நாளைய மன இறுக்கம் இரத்தச் சர்க்கரையே நேரடியாக உயர்த்தாவிட்டாலும் சிகிச்சை முறைகளைச் சரியாக கடைபிடிக்க முடியாமல் செய்து விடுகின்றன. இவர்கள் மன இறுக்கத்தினால் அடிக்கடி இரத்தப் பரிசோதனைகள் செய்து கொள்வதில்லை. உடற் பயிற்சிகள் மேற்கொளவதில்லை. இதனால சர்க்கரை உயர்வது தவிர்க்க இயலாததாகி வருகிறது.

மன இறுக்கத்தைக் குறைப்பதாக எண்ணிக் கொண்டு, சிலா் அதிகமாக உணர்வு உண்பது, மது அருந்துவது, புகை பிடிப்பது போன்ற தவறான வழிகளை மேற்கொள்கிறார்கள். இவைகள் அனைத்தும் நோயின் தீவிரத்தை உயர்த்துமே அன்றி நன்மை பயப்பதில்லை. உணர்ச்சிவயப்படும் போதும், மன அழுத்தம் கொள்ளும் சமயங்களிலும் சர்க்கரையின் அளவு இயல்பு அளவிலிருந்து மிக உயர்ந்தும், தாழ்ந்தும் காணப்படும். இந்த நிலைக்கு ''நிலை யற்ற நீரிழிவு நோய்'' என்பார்கள். இதுவும் பல தீய விளைவுகளை ஏற்படுத்துவதோடு சிகிச்சையையும் கடினமாக்குகிறது.

## தீர்வுக்கான வழிகள்

எப்போதும் மனமகிழ்வுடன் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். மன இறுக்கம் தரக்கூடிய சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாதென்றால் அச்சூழ்நிலைகளை மன இறுக்கம் ஏற்படாதவாறு எதிர்கொள்ள பழகிக்கொள்ள வேண்டும். உதாரணமாகப் பக்கத்து வீட்டுக்காரருடன் ஒரே சண்டை சச்சரவென்றால் வேறு வீடு பார்த்து மாறிக் கொள்ள வேண்டும்.

மாற்ற முடியாத வாழ்க்கைத் துணையே பிரச்சினை என்றால் மூல காரணத்தை ஆரஅமர யோசித்து, அன்புடன் அணுகித் தீர்த்துக் கொள்ள வேண்டும். ''நடப்பதெல்லாம் நன்மைக்கே'' என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக்கொண்டால் மனச்சோர்வுகள் நீங்கும்.

தினசரி வாழ்க்கையில் உறுதியாகக் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி மன இறுக்கத்தைத் தளர்த்தும் வழிகளை அனுசரிக்க வேண்டும்.

இதற்கு, நண்பர்களிடம் மனம்விட்டுப் பேசுவது, அறிவு உடையோரின் சிறப்புகளைக் கேட்பது, புத்தகங்களைப் படிப்பது, மனதுக்கு விருப்பமான இசையைக் கேட்பது, பிடித்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது, இயற்கை காட்சிகளைக் கண்டு மனம் வியப்பது, நகைச்சுவை உணர்வினை வளர்த்துக் கொண்டு நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் காண்பது அவற்றில் பங்கு கொண்டு மனதாரச் சிரித்து மகிழ்வது போன்ற பல வழிகளை நடைமுறைப்படுத்தலாம். நல்ல பலன் கிடைக்கும்.

உடல் இறுக்கத்தையும், மன அழுத்தத்தையும் போக்கும் தியானப் பயிற்சிகள், சாவாசனம் போன்ற யோகாசன முறைகளை முறையாகக் கற்றுத் தகுதி வாய்ந்தவர்களின் கண்காணிப்பில் கடைப் பிடிப்பதும் மன அமைதிக்கு வழிவகுக்கும்.

வாழ்க்கை முறை மாற்றங்களை சமுதாய ஒத்துழைப்பு நோயறிவு இவற்றுடன் குறிப்பிட்ட சில மருந்துகளைப் பயன்படுத்துவதால் இக்குறைபாட்டை எளிதில் வெற்றி கொள்ளலாம்.

டி.சி.ஏ.மருந்துகள் போன்றவைகளும் வெகுவாகப் பயனளிப்பவை. மருத்துவரின் பரிந்துரையீன் பேரில் முறையாக எடுத்துக் கொள்வது நலம் பயக்கும்.

மன இறுக்கம் வருவதற்கு காரணம் நாம்தான். அது எப்படிபட்ட தீயவிளைவுகளை ஏற்படுத்தினாலும் அவற்றைத் தடுக்கின்ற வழிகள் நம்பிக்கையில் தான் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவைகளைப் புரிந்து கொண்டு சிறிது எச்சரிக்கையுடன் நெருக்கடியான, தீய சூழ் நிலைகளை ஒதுக்கி வாழக் கற்றுக் கொண்டால் நீரிழிவு நோயை வராமலும் தடுக்கலாம்.

வந்த பின்பும் சரியான கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். நோயின் தீய விளைவுகளைத் தவிர்க்கலாம். □

# வெலிகந்தப் பிரதேசத்தில் கருணாவின் படையினர்!

(கொழும்பு)

வெலிகந்த பிரதேசத்தில் கருணாவின் படையினர் ஆயுதங்களுடன் இருப்பதை கண்காணிப்புக் குழு உறுதி செய்துள்ளது.

இது குறித்துக் கடந்த 6 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு மட்டக்களப்பு கண்காணிப்புக்குழுத் தலைவர் ஸ்டீன் ஜோர் ஜன்ட் தெரிவித்தார்.

கிழக்கில் புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை அடுத்து அவற்றை விசாரணை செய்வதற்கென ஜனாதிபதி, ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தார்.

இதனை அடுத்து கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்புத் தலைவர் கூறிய சான்றுகளைக் கொழும்பிலுள்ள கண்காணிப்புக்குழுத் தலைமையகம் உறுதி செய்துள்ளது.

கடந்தமாதம் 20 ஆம் திகதி அன்று கருணாவின் நடமாட்டம் பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியாகிய உடனேயே தாம் தீவிரமான ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும் கருணாவின் மீதுள்ள ஏனைய குற்றச்சாட்டுக்களையும் தாம் தீவிரமாக விசாரித்து வருவதாக கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஆயினும் அரச கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் கருணாகுழுவினரின் பிரசன்னத்தைத் தொடர்ந்தும் இராணுவம் மறுத்துவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-6)

# தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு துறைமுக அதிகாரசபை கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

மீளக்கட்டியெழுப்புதல் என்னும் போர்வையில் துறைமுக அதிகாரசபையை தனியார் மயப்படுத்தும் அரசின் திட்டத்திற்கு துறைமுக அதிகாரசபை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன்,

வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் எச்சரித்துள்ளது.

தமது கோரிக்கைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆகிவிட்டதாக அதிகார சபையின் கீழ் உள்ள தொழிற் சங்கங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், தேர்தலுக்கு முன் வழங்கிய வாக்குறுதிகளையும் அரசாங்கம் மீறியுள்ளதாகவும் அவை தெரிவிக்கின்றன.

தமது அதிகாரசபையை வேறு நிறுவனங்களிடம் கையளிக்க அரசாங்கம் முயன்றால் உடனடியாக வேலை நிறுத்தத்தை மேற்கொள்வோம் என தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் துறைமுகத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு முறைப்பாடொன்றை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மனோ தித்தவெல தலைமையிலான ஒரு நிறுவனத்திடமே இவ்வதிகாரசபை கையளிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே தீர்மானம் எடுத்து விட்டது. இதனை மீளாய்வு செய்யுமாறு மங்கள சமரவீரவிடம் மீண்டும் வலியுறுத்திள்ளோம்.

இது செவிமடுக்கப்படவில்லை இதனால் வேலை நிறுத்தத்தை விட வேறுவழியில்லை என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு ஜே.வி.பியும் ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதேசமயம் இதுபற்றிக் கருத்துக்கூற மங்கள சமரவீர மறுத்துவிட்டார். (க-6)

# வழக்கு விசாரணைகளை தாமதப்படுத்துவது அடிப்படை மனித உரிமையை மீறும் செயல்

(கொழும்பு)

பொலிஸினால் தாக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்கு விசாரணைகளை தாமதப்படுத்துவதன மூலம் முறைப்பாட்டாளர்களின் அடிப்படை மனிதவுரிமைகள் மீறப்படுவதாக மனிதவுரிமை ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் இவ்வாறான சித்திரவதைகளுக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக செயற்படுத்த வேண்டுமென்று ஆணைக்குழுவின் சட்டத்தரணி சஞ்சீவ வீரவிக்கிரம தெரிவித்திருக்கிறார்.

மோசடி மற்றும் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளானவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காக மனிதவுரிமை மன்றம் கண்டியில் ஏற்பாடு செய்த செய்தியாளர் மாநாட்டில உரையாற்றும போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதியை நிலை நாட்டுவதற்கு 8 வருடம் முதல் 10 வருடம் வரையான காலப்பகுதி அதிகமானதாகும். இதனால் பாதிக்கப்பட்டவர்களின் மன நிலை மேலும் பாதிக்கப்படுவதாக கண்டி மனிதவுரிமை மன்றத்தின் சட்டத்தரணி சுசங்கிகா ரணவீர தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் சாட்சிகள் நடந்த சம்பவங்களை மறந்து விடுவார்கள். ஏனென்றால் விரும்பத்தகாத அனுபவங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள மனித மனம் விரும்புவதில்லை.

இதனால் இயற்கையாகவே அவற்றை மறந்து விடுகின்றார்கள்.

சாட்சியாளர்கள் இறந்து போவது, அக்கறையின்மையால் சாடசியளிக்க வராமல்விடுவது போன்ற காரணங்களினால் குற்றவாளிகள் விடுதலையாகும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது எனவும் சுசங்கிகா ரணவீர மேலும் தெரிவித்தார். (7-8)

# தபால் திணைக்களத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரி அனுமதி வழங்கவில்லை


(கொழும்பு)

தபால் திணைக்கழத்தில் கடிதங்களை வகைப்படுத்தும் பிரிவில் சுமார் ஆயிரத்து 500ற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டுத் தரவுகளின் படி காணப்பட்ட இவ் வெற்றிடங்கள் தற்போது மேலும் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாத காரணத்தால் தபால் விநியோகங்களில் தாமதம் ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய ஊழியர்களை சேர்ப்பதற்கான சிபார்சு அறிக்கையொன்றை திறைசேரிக்கு சமர்ப்பித்திருப்பதாகவும் ஆயினும் அதற்கு இதுவரை அனுமதிகிடைக்கவில்லையெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-7,9)





கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரால் நடத்தப்பட்ட சுவாமி விவேகானந்தரின் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வாக கல்லூரியின் அபிவிருத்தி சபையின் பிரதான நிர்வாகி மங்களவிளக்கேற்றுவதையும்,

கலலூரியின் தரம் 1 வகுப்பு மாணவ மாணவிகளுக்கு சுவாமி சித்ரூபானந்தா இனிப்புப்பண்டங்களை வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# அரசின் மீது குற்றம் கண்டுபிடிப்பதை கூட்டமைப்பினர் நிறுத்த வேண்டும் !

## அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

ஆட்சி அதிகாரத்தில் உள்ள ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தைப் பாதுகாப்பது கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிககும் கூட்டணிக் கட்சிகளின கடமையென சுற்றுலா முதலீட்டுத்துறை ஊக்குவிப்பு அமைச்சர் அநுராபண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

நாத்தாண்டியா பகுதியில் குளங்களை புனரமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ஆயிரம் குளங்களை மக்களிடம் ஒப்படைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பினால் அங்கம் வகிக்கும் கட்சிகளும் அதன் உறுப்பினர்கள் சிலரும் இதனை புரிந்து கொள்ளவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மக்களே வாக்களித்தார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆனால் சிலர் அதனை மறந்து விடுகின்றனர்.

ஜே.வி.பி.மீது குற்றம் சாட்டுவோர் இந்தக் கூட்டமைப்பு அமைக்கப்பட்டதாலேயே தாம் பிரதியமைச்சர் பதவிகளில் இருக்கின்றோம் என்பதை மறந்துள்ளனர்.

நானும், ஜே. வி.பியும், மங்கள சமரவீரவும், அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் பலரின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொணடு இந்த கூட்டணியை அமைத்தது. இவ்வாறானவர்களுக்கு பிரதியமைச்சர் பதவியைப்பெற்றுக் கொடுக்கவே.

அந்த அமைச்சுப் பொறுப்புகளை வைத்துக் கொண்டு கூட்டமைபபு அரசாங்கத்தைக் குறை கூறுவதை அவர்கள் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

பிரதமர் முதல் கீழ் மட்டம் வரை அரசாங்கத்தைக் குறை கூறுவதை முதலில் நிறுத்த வேண்டும். கூட்டமைபபு அரசாங்கத்திற்கு அனைவரும் கட்மைப்பட்டுள்ளோம்.

இந்த கூட்டமைப்பு அரசுக்கு 5 வருட பதவிக்காலம் உள்ளது. ஜனாதிபதிக்கு எத்தனை வருடங்கள் உள்ளதென்பது எமக்குத் தெரியாது. நிச்சயமாக இந்த கூட்டமைப்பு இருக்கும் வரை இந்த அரசை எதிர்காலத்திலும் யாராலும் அசைக்கமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-7,8)

## இராசி பலன்

**12.04.2005**
**(பங்குனி 30, செவ்வாய்க்கிழமை)**
**சதுர்த்தி பின்னிரவு 2.47 மணிவரை**
**கார்த்திகை பிற்பகல் 1.08 மணிவரை**
**இராகுகாலம் 3.06 - 4.36 மணிவரை**
**சுபநேரம் 10.36 - 12.06 மணிவரை**
**சித்தாமிர்தம், சதுர்த்தி விரதம்**

- **மேடம்** — கடின வார்த்தை, காரிய தாமதம், கௌரவக் குறைவு, வேலைச் சுமை.
- **இடபம்** — கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை.
- **மிதுனம்** — பிதா சிந்தை, உணர்ச்சிவசப்படல், பிரயாணம், முயற்சி கைகூடும்.
- **கடகம்** — தொழில் சிந்தை, பெருமையடைதல், மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம்.
- **சிங்கம்** — சுப நிகழ்வு, உற்சாகம், நல்ல செய்தி, தொழில் நன்மை.
- **கன்னி** — ஆன்றோர் ஆசி, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், வீண் பயம்.
- **துலாம்** — வீண் தொல்லை, போசன சுகம், காரிய தடங்கல், வாகன பயம்.
- **விருச்சிகம்** — திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும்.
- **தனுசு** — சுக வாழ்வு, பண வருவாய், பிரயாண நன்மை, காரிய அனுகூலம்.
- **மகரம்** — வியாபார நன்மை, காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், ஆரோக்கியக் குறைவு.
- **கும்பம்** — மாதா சுகம், கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, முயற்சி தாமதம்.
- **மீனம்** — இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

# சுனாமிப் பேரலையால் சேதமடைந்த வீடுகளுக்கான கடன்கள் ரத்துச் செய்யப்படும்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரசாங்க கடன் அடிப்படையில் கட்டப்பட்ட அரசாங்க ஊழியர்களின் வீடுகள் சேதமடைந்திருந்தால் அவ் வீட்டிற்கான கடன்களை ரத்துச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து அமைச்சுக்களுக்கும அறிவித்துள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகள் பணிப்பாளர் நாயகம் வி.ஜி.கருணாரத்தின தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டஙகளில் பல அமைச்சுக்களைச் சேர்ந்த ஊழியர்கள் அரசாஙக கடன் பெற்று அமைத்த வீடுகள் முற்றாக அழிந்துள்ளதாக அரச நிர்வாக அமைச்சுக்கு தகவல்கள்கிடைததுள்ளது.

அதன்படி குறிப்பிடப்பட்ட அரசாங்க ஊழியர்கள் பெற்றுள்ள வீடமைப்புக் கடனில் செலுதத்வுள்ள தொகையை ரத்துச் செய்ய நிதி அமைச்சு இணக்கம தெரிவித்துள்ளதாக ஒருங்கிணைக்கப்பட்ட சேவையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (க-9)


# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இந்து சமய கலாசாரத் திணைக்களம் கோரியுள்ளது.

இப்பரீட்சைக்கு அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களும், பண்டிதர் பட்டம் பெற்றவர்களும், சைவப்புலவர் பட்டம் பெறறவர்களும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இந்து சமயம் அல்லது இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கொண்டு சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று இந்து சமயத் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இநது தர்மாசிரியர் பரீட்சை அக்டோபர் மாதம் நடாத்தப்படவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி மே மாதம் 14 ஆம் திகதியாகும். (க-9)



உயிர்த்த ஞாயிறன்று போயிட்டி, சீந்திப்பந்தலில் மேடையேற்றிய ‘மனம் போல் மாங்கல்யம்’ நாட்டுக்கூத்து நிகழ்ச்சிக்கு, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பங்குத்தந்தை அருட்தந்தை யோசெப் பிரான்சிஸ் அடிகள் மங்கள விளக்கேற்றுவதையும், இளவாலை பங்குத் தந்தை வணபிதா பொனிபஸ் அடிகளார் அருகே நிற்பதையும் காணலாம். (படம் : த.பரமலிங்கம்)

# புதிய போப் தேர்வுப்பணி தொடங்குவதால் கர்தினால்கள் பேட்டி அளிக்கத் தடை

(பெர்லின்)

புதிய போப் தேர்வு பணி தொடங்குவதால் கர்தினால்கள் பேட்டி அளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஜெர்மன் நாட்டின் கத்தோலிக்க ஆயர்களின் பேரவைக்கு தலைவராக இருப்பவா கார்ல் லெமான். இவர் கர்தினால் பதவியிலுள்ள பெரிய மதகுரு புதிய போப்பைத் தேர்வு செய்யும் தகுதியுடைய 117 பேரில் இவரும் ஒருவர்.

புதிய போப்புக்கான தேர்தல் குறித்து நேற்றுமுன்தினம் இவர் ஜெர்மன் நாளிதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்தார். அதில் அவர் கூறியதாவது,

புதிய போப்பாகப் போவது யார்? என்பது இன்னும் தெளிவாகவில்லை. அந்தப் பதவிக்குத் தகுதியான நபர் இவர்தான் என்று இதுவரை யாரும் அடையாளம் காணப்படவில்லை. புதிய போப்பைத் தேர்வு செய்வதில் ஒத்த கருத்து ஏற்படவேண்டும் என்று விரும்புகிறோம்.

இம்மாதம் 18ஆம் திகதி கூடி புதிய போப்பைத் தேர்வு செய்யும் பணியைத் தொடங்குவோம. போப் பதவியை ஏற்கப் போகும் நபருக்குப் பல சவால்கள் காத்திருக்கின்றன. கத்தோலிக்க நாடுகளான ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இப்போது பக்தி குறைந்து வருகிறது. சீனா மற்றும் ஆபிரிக்காவில் நிலவும் அரசியல் பிரச்சினைகளும் புதிய போப்புக்குச் சவாலாக அமையும் என அவர் கூறியுள்ளர்.

இதனிடையே புதிய போப்பைத் தேர்வு செய்யும் பணி விரைவில் தொடங்க இருப்பதால் கர்தினால்கள் யாரும் இனிமேல் தொலைக்காட்சி, நாளிதழ்களுக்குப் பேட்டியளிப்பதில்லை என ஒருமனதாக முடிவு செய்துள்ளனர். வத்திக்கானின் அதிகாரப் பூர்வ செய்தி தொடர்பாளர் ஜோக்கின் நவாரோ வால்ஸ் இந்தத் தகவலை நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார். போப்பைத் தேர்வு செய்யப் போகும் 117 கர்தினால்களும் இனிமேல் அமைதியாக ஜெபம் மற்றும் தவம் செய்யும் பணியில் இறங்குவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே புதிய போப் தேர்வைச் செய்யும் உரிமையுள்ள 117 கர்தினால்கள் உட்பட மொத்தம 130 கர்தினால்கள் புதிய போப் தேர்வு குறித்து நேற்றுமுன்தினம் மூடிய அறையில் கூடி கருத்துக்களைப் பரிமாறிக்கொணடனா. (ற)



இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள சீனப் பிரதமர் வென் ஜியாபோ காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியை சந்தித்துப் பேசிய காட்சியைப் படத்தில் காணலாம்.

# தகவல் தொழில்நுட்பத்துறையில் இந்தியா – சீனா கூட்டுமுயற்சி

(பெங்களூர்)



தகவல் தொழில்நுட்பத்துறையல் இந்தியாவும் சீனாவும் கைகோர்த்துச் செயல்பட்டால் உலகில் முதல் இடத்தைப் பிடிக்கலாம். என்று வென்ஜியாபாவோ விருபபம் தெரிவித்துள்ளார்.

சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ நான்கு நாள் பயணமாக கடந்த சனிக்கிழமை இந்தியா வந்தார்.

பெங்களூரில் உள்ள சர்வதேசத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அவர் சுற்றிப் பார்த்தார். டி.சி. எஸ். நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் நாஸ்காம் அமைப்பின் தலைவருமான ராமதுரையிடம் அவர் பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

தகவல் தொழில்நுட்பத்துறையில் இந்தியாவும் சீனாவும் இணைந்து பணியாற்றவேண்டும். சீனத் தகவல் தொழில்நுட்பத்துறை அதிவேக வளர்ச்சியைப் பெற்றுவருகிறது. எங்களிடம் 10கோடி கமபியூட்டர்கள் உள்ளன. எங்களது ஹார்டுவேர் தொழில்நுட்பமும் இந்தியாவின் சாப்ட்வேர் தொழில்நுட்பமும் இணைந்தால் உலகில் நாம் முதலிடத்தைப் பெறமுடியும்.

இத்துறை மனித மூளை, மார்க்கெட் நிலவரம் ஆகிய இரணடையும் அடிப்படையாக வைத்து முன்னேறி வருகிறது. இந்தியாவிலும் சீனாவிலும் புத்திசாலிகள் அதிகமாக உள்ளனர். நாம் கைகோர்த்துச் செயல்பட்டால் அபார வளர்ச்சி அடைய முடியும் மக்களும் வளமடைய முடியும் என்றார்.

இதேவேளை, இந்தியாவில் தொழிநுட்பக் கம்பெனிகளின் கூட்டமைப்பான நாஸ்காம் போன்ற அமைப்பைச் சீனாவில் ஏற்படுத்த வேண்டும் என்று ராமதுரை கோரிக்கை விடுத்தார். அதைச் சீனப் பிரதமர் ஏற்றுக்கொண்டார். இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில 4சதவீதம் தகவல் தொழில்நுட்பத்துறையின் பங்காக உள்ளது.

2008ஆம் 2009ஆம் ஆண்டில் இந்த அளவு 7சதவீதமாக மாறும். அன்னியச் செலாவணி வரவு 30 சதவீதமாக இருககும் நாஸ்காம் போன்ற அமைப்பபைச் சீனாவில் ஏற்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் வழங்குவோம் என்று ராமதுரை கூறினார். (க)


# சார்ள்ஸுக்கு அரசர் பட்டமா? பிரிட்டன் மக்கள் கடும் எதிர்ப்பு

(லண்டன்)

நீண்டநாள் காதலி கமீலாவைக் கரம் பிடித்துவிட்டார் பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ். ஆனால் அரசர் பட்டத்தை அவருக்கு வழங்கக் கூடாது. மகன் வில்லியமுக்குத்தான் வழங்க வேண்டும் என்று மூன்று கருத்துக் கணிப்புகள் தெளிவாகக் கூறியிருக்கின்றன.

பிரிட்டன் இளவரசர்-கமீலா திருமணம் கடந்த சனிக்கிழமை எளிமையான முறையில் நடந்து முடிந்தது. இருவரும் தேனிலவுக்காக ஸ்கொட்லாந்து செல்கின்றனா. இந்நிலையில் அடுத்த அரசர் பட்டம் யாருக்கு என்ற கேள்வி எழுந்துள்ளது.

சார்ள்ஸுக்கு அரசர் பட்டம் வழங்குதில் பிரிட்டன் மக்களில் பலருக்கு உடன்பாடு இல்லை . குறிப்பாக மறைந்த டயானாவின் ஆதரவாளர்களுக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லை.



சார்ள்ஸை கமீலா மணந்தாலும் அவருக்கு ராணி பட்டம் அளிக்கக் கூடாது என்ற எதிர்ப்பும் கடுமையாக உள்ளது. அதேபோல் அரசர் பட்டத்தை சார்ள்ஸ்க்கு வழங்குவதற்குப் பதில் அவருடைய மூத்த மகன் வில்லியமுக்கு வழங்கவேண்டும் என்ற கருத்து பரவலாக உள்ளது. இது குறித்து பிரிட்டனில் மூன்று கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

லண்டனில் இருந்து வெளிவரும் 'சண்டே டைம்ஸ்', 'அப்சர்வா', 'சண்டே மிர்ரர்' ஆகிய பத்திரிகைகள் கருத்துக் கணிப்புக்கள் நடத்தின.

அதில் சார்ள்ஸ் -கமீலா மறுமணத்துக்கு மக்கள் ஆதரவு தெரிவித்தனர். அதேபோல் அரசர் பட்டத்தை வில்லியமுக்குத்தான் வழங்கவேண்டும் என்று உறுதியாகத் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமீலாவைத் திருமணம் செய்து கொண்டதால், சார்ள்ஸின் மரியாதை, புகழ் உயாந்துவிடாது என்று பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சார்ள்ஸுக்கு அரசர் பட்டத்தைக் கொடுத்தாலும், லண்டன் தெருக்களில் கலவரம் ஒனறும் வெடிக்காது. ஆனால், எங்கள் முன்னுரிமை வில்லியமுக்கே என்று பலர் தெரிவித்துள்ளனர்.

'மிர்ரர்' நடத்திய கருத்துக் கணிப்பில் 43 சதவீதம் பேர் வில்லியமுக்கு ஆதரவு அளித்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக 'சண்டே டெலிகிராப்' நடத்திய கருத்துக் கணிப்பில், அடுத்த அரசராக வில்லியமுக்கு 42 சதவீத மக்கள் ஆதரவு அளித்துள்ளனர். (க)

உலக தரிசனம்

## பீஜிங் நகரில் உள்ள ஜப்பானிய பிரஜைகளை பாதுகாக்க கோரிக்கை

(பீஜிங்)

சீனத் தலைநகரான பீஜிங்கிலுள்ள ஜப்பானியப் பிரஜைகளையும் அவர்களது நலன்களையும் பாதுகாக்குமாறு பீஜிங்கில் பணிபுரியும் ஜாப்பானிய தூதுவர் ஹொரேசிக்சி சுனாமி சீன அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பீஜிங்கிலுள்ள ஜப்பானியத் தூதுரகம் மீது கற்களை வீசி ஆர்ப்பாட்டம் நடாத்தப்படடமை கவலைக்குரிய விடயம் என்றும் ஜப்பானியத் தூதுவர் தெரிவத்துள்ளார்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஜப்பான் நடந்து கொண்ட விதம் குறித்தும், ஐககிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்திர அங்கத்துவம் கோருவதற்கு ஜப்பான் முயற்சி செய்வது தொடர்பாகவும் கண்டனம் தெரிவித்து சீன ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜப்பானியத் தூதரகம் மீதும், தூதுவரின் இல்லம் மீதும் கற்களை வீசி தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். (க-7)

# அபூர்வ பண்டா கரடி



பலவண்ண நிறத்தில் காணப்படும் பண்டா கரடிகள் சீனாவில் அதிகம் காணப்படுகின்றன.

இந்த வகை பண்டா கரடிகள் இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தில் உள்ள கங்டாக் வனவிலங்குகள் பூங்காவில் கண்ணும் கருத்துமாக பராமரிக்கப்படுகின்றன.

படத்தில் பூங்காவில் காணப்படும் அபூர்வ பண்டா கரடி ஒன்றைக் காணலாம்.

இந்தியாப் பண்டிகைகளில் கும்பமேள திருவிழாவிள் போதுதான் அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் கூடுகின்றனர். இதேபோன்ற மதத்திருவிழா ஒன்று தைவான் நாட்டில் தற்போது நடந்து வருகிறது. தைவானின் செங்லேன் கோவில் பக்தர்கள் அந்நாடுமுழுவதும் கோவில் கோவிலாக சுமார் 270 கிலோ மீற்றர் தூரம் 8நாட்கள் சுற்றித்திரிந்து இறுதியில் தாயிஜா என்ற இடத்திலுள்ள தெங்லேன் கோவிலை வந்தடைகின்றனர்.



# இ–மெயிலில் ஆபாச படங்களை அனுப்பியவருக்கு 9 ஆண்டு சிறை

ஆபாசப் படங்களை இ-மெயில் அனுப்பி சம்பாதித்த அமெரிக்காவைச் சேர்ந்த உடன் பிறப்புகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள விர்ஜீனியா மாகாணத்தைச் சேர்ந்தவர் ஜெர்மி ஜேன்ஸ்.

இவருக்கு வயது 30 இவர். தனது சகோதா ஜெசிக்காவுடன் சேர்ந்து இ-மெயில் மூலம் ஆபாசப் படங்களை விற்பனை செய்து வந்தார். இதற்காக தனது வீட்டில் 1000 பேர் பணிபுரியும் அலுவலகத்தில் இருப்பதைப் போன்ற இன்டர்நெட் வசதிகளை வைத்திருந்தார். அதன்மூலம் நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் இ-மெயில்களை உலகம் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு அனுப்பியுள்ளார்.

இந்தத் தொழில் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.3.25கோடியை இவர்கள் சம்பாதித்துள்ளனர். தற்போது இவர்களைப் பொலிஸார் கைதுசெய்து வழக்குத் தொடுத்தனர். நேற்றுமுன்தினம் இந்த வழக்கில் தீர்பபு அறிவிக்கப் படடது. ஜேன்சுக்கு 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப் பட்டது. அவரது சகோதரி ஜெசிக்காவிற்கு சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. ரூ.3.25 இலட்சம் அபராதம் மட்டும் விதிக்கப்பட்டது. (ற)

# மீள்பார்வை



## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 35



### அத்தியாயம் X

***சிறப்புரிமைகள் பற்றிய குழு***

அரசியலமைப்பின் உறுப்புரை 4(இ) மக்களின் நீதிமுறைத் தத்துவமானது நீதிமன்றங்கள் ஊடாகப் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்பட வேண்டுமென்ற விதிக்கு ஒரு விதிவிலக்கை அளிக்கின்றது. பாராளுமன்றச் சிறப்புரிமைகளும் தத்துவங்களும் தொடர்பான விடயங்களில் பாராளுமன்றம் தானே ஓரளவு நீதி முறைத் தத்துவத்தை நேரடியாகப் பிரயோகிக்கின்றது. பாராளுமன்ற சிறப்புரிமையின் தோற்றமும் வளர்ச்சியும் தாய்ப் பாராளுமன்றமென்று குறிப்பிடப்படுகின்ற பிரித்தானியப் பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு வரலாற்றுடன் இரண்டறப் பின்னிப் பிணைந்துள்ளது. பாராளுமன்றச் சிறப்புரிமைதானே அதனைப் பற்றி எண்ணற்ற நூல்கள் எழுதப்பட்டுள்ள ஆய்வுக்குரிய ஒரு பிரதான விடயமாகும். இங்கு இவ்விடயத்தை ஆழமாக ஆராய்கின்ற எண்ணமில்லை. மாறாக ஓரளவுக்குச் சபையின் முன்னர் சிறப்புரிமை விடயமொன்றைத் தீர்மானிப்பதில் பின்பற்ற வேண்டிய நடைமுறையைக் கோடிட்டுக் காட்டுவதே நோக்கமாகும்.

சிறப்புரிமைகளென்பவை சபையின் உறுப்பினர்கள் தமது கடமைகளை இடையூறின்றி நிறைவேற்றுவதற்கு இயலச் செய்பவை. இலங்கையில் பாராளுமன்றச் சிறப்புரிமைகள் தொடர்பான சட்டமும் வழக்கமும் 1953 இன் 21ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்)சட்டத்திலும் அதன் பின் தொடர்பான திருத்தங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் சிறப்புரிமை மீறலொன்று இடம் பெறுகின்ற போது பின்பற்ற வேண்டிய சட்டத்தையும் நடைமுறையையும் வகுத்துரைக்கின்றது.

இச் சட்டத்தின் கீழ் சிறப்புரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளைக் கேட்பதற்கு உயர் நீதிமன்றத்துக்கும் அவ்வாறே பாராளுமன்றத்துக்கும் நியாயாதிக்கமுண்டு. அத்தகைய விடயங்களில் தீர்ப்புக் கூறுவதற்கான பாராளுமன்றத்தின் உரிமையானது நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான விடயங்களைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றங்களுக்குள்ள உரிமையை ஒத்தது.

பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்)சட்டம் இரு பகுதிகளையுடைய அட்டவணையைக் கொண்டுள்ளது. முதலாவது பகுதி சிறப்புரிமை மீறல்களென விவரிக்கப்படக்கூடிய தவறுகளைக் கொண்டுள்ள அதேவேளையில் இரண்டாம் பகுதி அவமதிப்புகள் என்று வகைப்படுத்தக் கூடிய தவறுகளைக் கொண்டுள்ளது. 1997 இன் 27 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் மூலம் பகுதி A இன் கீழுள்ள விடயங்களை விளங்குவததற்குப் பாராளுமன்றத்துக்கு முன்னர் இருந்த உரிமை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தின் நியாயாதிக்கம் பகுதி B இல் குறித்துரைக்கப்பட்ட தவறுகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் முன்னர் சிறப்புரிமை விடயமொன்றைக் கொண்டு வருவதற்கான முதற்படி உறுப்பினரொருவர் சபாநாயகருக்கு உரிய முன்னறிவித்தல் கொடுத்ததன் பின்னர் சபையில் அதனை எழுப்புவதாகும். சபாநாயகர் அவ்விடயத்தை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு ஆதாரமாகப் போதிய சான்றுள்ளதெனக் கருதுவாராயின் அதனை சபையில் எழுப்புவதற்கு அனுமதிக்கலாம். அத்தகைய பிரச்சினை 19 ஆம் நிலையியற் கட்டளையின் படி தனிப்பட்ட விளங்கங்களின் பின்னர் எழுப்பப்பட வேண்டும்.

அட்டவணையின் பகுதி A, இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட தவறுகளின் விடயத்தில் அவை சட்டமா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய அதேவேளையில், பகுதி B இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பான விடயங்கள் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படலாம். சிறப்புரிமைகள் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் ஓர் உறுப்பினரால் சபாநாயகருக்கு முறைப்பாடு செய்யப்படுவதன் பேரில் அல்லது தீர்மானமொன்று சபையில் நிறைவேற்றப்படுவதன் பேரில் சபாநாயகர் பொருத்தமான கூற்றுக்களுடன் அறிக்கையிடும்படி அவ்விடயத்தைச் சட்டமா அதிபருக்கு ஆற்றுப்படுத்தலாம். சட்டமா அதிபர் உள்ளவாறான சான்றை சீர்தூக்கிப் பார்த்த பின்னர் உயர் நீதிமன்றத்தில வழக்கொன்றைத் தாக்கல் செய்தல் உசிதமானதரவென்று சபைக்குத் திரும்ப அறிக்கையிடுகின்றார். சட்டமா அதிபரின் அறிக்கை சபையின் முன் வைக்கப்படும்போது உயர் நீதிமன்றத்தில் அவ்விடயத்தைத் தொடருமாறு அவருக்கு அறிவுறுத்துவதாவென்று சபை தீர்மானிக்கலாம் (பிரிவு25).

சிறப்புரிமைகள் பற்றிய குழு தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும் பத்துக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டதாக 127 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் நியமிக்கப்படுகின்றது. குழுவின் கூட்ட நடப்பெண் மூன்றாகும். அது ஒவ்வொரு சிறப்புரிமை பற்றிய பிரச்சினையையும் ஆராய்ந்து பார்க்கவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிகழ்வுகளைக் காட்டிச் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாவென்று தீர்மானிக்கவும் அவ்வாறாயின் மீறலின் தன்மை அது ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் ஆகியவற்றைத் தீர்மானிக்கவும் குழு தக்கதெனக் கருதக் கூடிய அத்தகைய விதப்புரைகளைச் செய்யவும் கூடும். குழு அதன் விசாரணை முடிந்தவுடன கூடிய விரைவாகப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடவேண்டும். குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் முழுமையான விசாரணையை நடத்துவதற்குத் தேவையான எவரேனும் ஆட்கள் ஏதேனும் ஆவணங்கள் அல்லது இதர பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும் மற்றும் எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும் குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

சிறப்புரிமைகள் பற்றிய பெரும்பாலான வழக்குகள் பாராளுமன்ற கூட்ட நடவடிக்கைகள் பற்றிய வக்கிர அறிக்கைகள் அல்லது பாராளுமன்றக் கூட்ட நடவடிக்கைகள் பற்றிச் செய்திப் பத்திரிகைகளில் குறிப்புரைகள் தொடர்பானவை அவமதிக்கப்பட்ட உறுப்பினர்களிடம் மன்னிப்புச் கோரல்களைப் பிரசுரிக்கும்படி செய்திப் பத்திரிகைப் பதிப்பாசிரியர்களுக்குப் பெரும்பாலும் கட்டளையிடப்படுகின்றது.

சிறப்புரிமைகள் குழு தவறுகளுக்குத் தண்டனையை விதந்துரைக்கலாம். 1997 இன் 27ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தம்) சட்டத்தின்படி பாராளுமன்றத்தால் விதிக்கப்படக்கூடி தண்டனைகள் பாராளுமன்றக் குழாத்தினால் கண்டிக்கப்படுவதற்கு அல்லது பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து அகற்றப்படுவதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தவறிழைத்தவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் அவர் ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பகுதி வரை பாராளுமன்றத்தினுள் அல்லது அதன் வளவெல்லையினுள் பிரவேசிப்பதிலிருந்து தடை செய்யப்படலாம். வேறு எவரேனும் ஆளின விடயத்தில் அவர் ஆறு மாதங்கள் வரை பாராளுமன்றத்தினுள் அல்லது அதன் வளவெல்லையினுள் பிரவேசிப்பதிலிருந்து தடை செய்யப்படலாம்.

***அரசாங்கக் கணக்குக் குழு***

அரசாங்கச் செலவினத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பை வற்புறுத்திக் கேட்கின்ற பாராளுமன்றத்திள் பங்கை அரசாங்கக் கணக்குக்குழு நிறைவேற்றுகின்றது. குழுக்கள் மத்தியில் அரசாங்கக் கணக்குக் குழு சிறப்பிடம் வகிக்கின்றது. அங்கு தான் அரசாங்கம் பகிரங்க நிதிகளின் முகாமைத்துவத்துக்குப் பொறுப்புச் சொல்லும்படி பணிக்கப்படுகின்றது.

அரசாங்கச் செலவினத்துக்குப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட தொகைகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து ஆராய வேண்டியது அரசாங்கக் கணக்குக் குழுவின் கடமை. எல்லா அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள் ஆகியவற்றின் பரிசீலனை செய்யப்பட்ட கணக்குகள், நிதிகள், நிதி நடைமுறைகள், செயல் நிறைவேற்றமும் முகாமைத்துவமும் என்பவை பற்றிக் குழு அறிக்கையிடுகின்றது. அரசாங்கச் செலவினம் தகுந்த அதிகாரத்துடனும் செலவிட்ட பணத்துக்குரிய பெறுமதியுடனும் செலவிடப்பட்டுள்ளதாவென்பதை அது உறுதிப்படுத்த வேண்டும்.

(தொடரும்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் பதிவாளர் சேவையில் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் உள்வாரியாக அல்லது வெளிவாரியாக பட்டம் பெற்றவர்களிடம் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் அலுவலகம், இல.280, பிரதானவீதி, கொழும்பு-11 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். (க-19)

★ ★ ★

சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள மேம்படுத்துகை அலுவல் பதவிகளுக்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி 18 வயதிற்கு குறையாமலும் 45வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.தற்போது அரச சேவையில் அல்லது மாகாணசபை சேவையில் உள்ளவர்களுக்கு இது ஏற்புடையதல்ல.

மேலும் விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அத்துடன் தாய் மொழிக்கு மேலதிகமாக சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் போன்ற மொழிகளில் கடமையாற்றுவதற்கு தகுதி உடையவர்களுக்கும், கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவுள்ளவர்களுக்கும் செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான திறமை உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி ஆணையாளர் நாயகம், சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம் இல.17, பாண்ஸ் பிளேஸ், கொழும்பு-7 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (க-19)

★ ★ ★

நீதிச்சேவை ஆணைக்குழுவால் இலங்கை உயர் நீதிமன்றப் பிரதிப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரி விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பதாரி உறுதிப்படுத்தப்பட்டுள்ள இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றப் பிரதிப்பதிவாளர் ஒருவராயிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை நீதிமன்றப் பதிவாளர் சேவையில் திருப்திகரமானதொரு சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள முதலாம்தரப் பதிவாளர் ஒருவராயிருத்தல் அல்லது ஒரு வருடத்திற்கு குறையாத காலப்பகுதிக்கு முன்னர் தொழிலில் ஈடுபட்ட சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2005.05.06 ஆம் திகதிகு முன்னர் செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழு, கொழும்பு-12 எனற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (க-19)

★ ★ ★

நீதிச்சேவை ஆணைக்குழுவால் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றப் பிரதிப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி இலங்கை நீதிமன்றப் பதிவாளர் சேவையில் திருப்திகரமான சேவைக் காலமொன்றினைக் கொண்டுள்ள முதலாம் தரப் பதிவாளர் ஒருவராய் இருத்தல் வேண்டும் அல்லது ஒரு வருடத்திற்குக் குறையாத காலப் பகுதிக்கு முன்னர் தொழிலில் ஈடுபட்ட ஒரு சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 28 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ் வயதெல்லை ஏற்புடையதன்று.

விணணப்பங்கள் 2005.05.06 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழு, கொழும்பு-12என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (க-19)

★ ★ ★

இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் (மொறட்டுவ) தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மோட்டார் இயந்திரவியல், மில்ரைற்/வார்ப்பியல், வாயுச் சீராக்கல்/குளிரூட்டல், மின்சக்தியியல், இயந்திரவியல், டீசல் இயந்திரவியல், வாகன மின்சாரவியல், ஒட்டுவேலை ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி க.பொ.த.சாதாரண பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் 2005.3.31ஆம் திகதியன்று 16வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2005.05.20ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம, இல. 582, காலி வீதி, கல்கிசை எனற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இதுகுறித்த மேலதிக விபரங்களை அறிய இம் மாதம் 8ஆம் திகதி வெளியான வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (க-19)

# பாதிப்புற்ற சிறுவர்களுக்கென மத்திய நிலையம் நிறுவப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மற்றும் தென் மாகாணங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கென புனர்வாழ்வு மத்திய நிலையம் ஒன்றை நிறுவ சமூக நலன் புரி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மொனராகலை, மதுரை கேட்டிய பிரதேசத்தில் 5 ஏக்கரில் குறிப்பிட்ட புனர்வாழ்வு மத்திய நிலையம் நிர்மாணிக்கப்படும் என்று அமைச்சு தெரிவிக்கின்றது.

இதற்கு ஒரு கோடி 50 இலட்சம் ரூபா செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சிறுவர் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் 300 சிறுவர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதோடு முழுமையான விளையாட்டரங்கு மற்றும் நூல் நிலையம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது. (க-9)

# ஆசிய நாடுகளுக்கிடையில் புதிய கேபிள் தொடர்பு


(கொழும்பு)

இலங்கை,இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கிடையே புதிய கேபிள் தொடர்பபை ஏற்படுத்தும் பணிகள் நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனமும்மாஸ்ரர் டைவோஸ் கம்பனியும் இத திட்த்தை கூட்டாக ஆரம்பித்துள்ளன.

சிறந்த தொடர்பாடல் வசதிகளை ஏற்படுததுவதுடன், செய்மதி தொழில்நுட்பத்தில் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கும் இத்திட்டம் உதவுமென்று மாஸ்ரர் டைவோஸ் கம்பனியின் உதவித் தலைவரும் நடவடிக்கைப் பணிப்பாளருமான ருவான் விக்கிரமநாயக்க தெரிவித்திருக்கிறார்.

கேபிள் பொருத்தும் பணிகள் 7 நாட்களில் பூர்த்தியடையும். இதற்கான மொத்த செலவினம் 50 கோடி அமெரிக்க டொலராகும். (க-7)





சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் நேற்று முனதினம் நடைபெற்ற சம்புரோக்ஷண சக் 63 நாயன்மார் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகப பெருவிழாவின் போது, அபிஷேக கும்பங்கள் சிவாச்சாரியார்களால் வீதிப் பிரதக்ஷணம் செய்யப்படுவதையும், தொடர்ந்து மூலவருக்கான மகா கும்பாபிஷேகம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# சூடுபிடிக்கும் நடைபாதை வியாபாரம்





சித்தரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.நகரப்பகுதியில் புடவை வியா பாரம சூடுபிடித்துள்ளது. சுனாமியால் ஏற்பட்ட பொருட்சேதம், உயிர்ச்சேதம் போன்ற பாதிப்புக் களிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்ட மக்கள் புத்தாண்டைக் கொண் டாடுவதில் ஆர்வம்காட்டி வருக றார்கள்.

இம்முறை யாழ்.நகரில் நடைபாதை புடவை வியாபாரிகள் பெருமளவில் வந்ததனால் மக்கள் நடைபாதை வியாபாரிகளிடம் புடவைகளை வாங்கு வதில் ஆர்வம்காட்டி வருகிறார்கள்.

இதனால் புடவைக்கடை வியாபாரிகளது வியாபாரம் மந்தமாக இருப்பதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. (க-19)

## மூன்றாண்டு கால செயன்முறைத் திட்டம்

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் எதிர்வரும் மூன்றாண்டு காலத்திற்கான நடுத்தரச் செயற்திட்டம் ஒன்று நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் மேற்கொள்ளப் படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் செயற்படுத்தக்கூடிய நடுத்தரத் திட்டங்களின் முன்மொழிவுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் அனுப்பி வைக்குமாறு யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார். (7-49)

## அன்னை பூபதி ஞாபகார்த்த விவாதப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் அன்னை பூபதி வெறறிக்கிண்ணத்திற்காக அழைக்கபபட்ட பாடசாலை அணிகளிற்கிடையில் நடாத்தப்பட்ட மாபெரும் விவாதச் சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிககிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரையின் வாழ்த்துரையுடன் நடைபெற்ற இப்போட்டியில் பிரபல பாடசாலைகளான யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி ஆகியனபங் கு பற்றின.

இதில் மூன்றாம் இடத்தினை வேம்படி மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது. இறுதிப்போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி ,யாழ்பாணக்கல்லூரி ஆகியன தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (7)

## திருத்தப்படாத வீதி

(பொன்னாலை)

பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் வீதி நீணட காலமாக திருத்தப்படாமல் உள்ளதால் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன கத்தோலிக்க த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு செபமாலை மாதா ஆலயம் ஆகியவற்றிற்குச் செல்பவர்கள் உட்பட இவ்வீதி வழியாகச் செல்லும பொதுமக்கள் சிரமமடைந்து வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பண்டத்தரிப்பு செப மாலை மாதா சனசமூக நிலையம் வலி-தென மேற்கு பிரதேசசபை செயலாளரிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(7-49)

## நிக்கொட் உதவி

(பொன்னாலை)

நான்கு சக்கர உழவு இயந்திரம் ஒன்றும் அதற்கான பெட்டியும் மானிப்பாய பிரதேசசபைக்கு நிக்கொட் அமைப்பால் விரைவில் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட "நிக்கொட்" பிரதித்திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராசா பிரதேசசபை செயலருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை "நிக்கொட்" வழங்கிய தண்ணீர் தாங்கி மற்றும் நீர் இறைகும் இயந்திரம் ஆகியவற்றை மானிப்பாய் பிரதேசசபைக் களஞ்சியப் பொறுப்பதிகாரி த.சிவசுதன் சமீபத்தில் பொறுப்பேற்றார்.

(7-49)

## நிர்வாகிகள் தெரிவு

(பொன்னாலை)

புங்குடுதீவு அபிவிருத்திக் கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக பேராசிரியர் க.குகபாலனும், உபதலைவராக கே.சண்முகலிங்கமும், செயலாளராக எஸ்.பேரின்பநாதனும், உபசெயலாளராக எஸ்.தர்மகுலசிங்கமும், பொருளாளராக பஞ்சலிங்கமும் தெரிவு செயயப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஆறு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செயயப்பட்டுள்ளது. (7-49)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

*நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்*

**யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கோதுமை மா கேள்விகோரல்**

**ஏப்ரல்,மே,யூன்–2005**

1) யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு மாதமொனறிற்கு 400Mt படி 1200Mt கோதுமை மா விநியோகிப்பதற்காக கேள்விகள் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
| --- | --- |
| 2005 ஏப்ரல் | 400 Mt |
| 2005 மே | 400 Mt |
| 2005யூன் | 400 Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2005.04.11ஆம் திகதி தொடக்கம் 2005.04.26ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால உறையில் நேரடியாகவோ/தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.04.27ஆம் திகதி பி.ப.2.00மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப.3.15மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல் படுத்தல் முறிக்காக -PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6. கூட்டுறவு அபிவிருத்தி வர்த்தக மற்றும் பாவனையாளர் நுகர்ச்சியாளர் திணைக்களத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மாவாக இருத்தல் வேண்டும்.

7. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர்/அரச அதிபர்
மாவட்ட கேள்விச் சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C/223)

## மனிதக்கழிவிலிருந்து மின்சாரம் பெறலாம்?

(சிக்காக்கோ)

எரிசக்திக்கு மாற்று என்ன என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்த வண்ணம் உள்ளனர்.

அமெரிக்க நாசா விண்வெளி ஆராய்சசியியலாளர்கள் அதற்கான மாற்றுவழியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். என்ன தெரியுமா? அது தான் மனிதக்கழிவு! அதிர்ச்சியாக இருக்கின்றதா?

பகரீரியாக்களுக்கு மனிதன் கழிவை உணவாகக் கொடுக்கும் போது அதில் மின்சாரம் உண்டாகிறது என்று அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். வேற்றுக் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் போது அந்த விண்கலத்தில் 6 விண்வெளி வீரர்கள் 2 ஆண்டு காலத்திற்கு பயணம் செய்யும் போது 6 தொன்னுக்கு மேல் மனிதக்கழிவை வெளியேற்றுவார்கள.

இதன்மூலம் நீண்டதூர விண்வெளப் பயணங்களுக்கு எரிசக்திக்கான முக்கிய மூலாதாரமாக மனிதக்கழிவு மாறிவிடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றது.

இதில் பயன்தரக்கூடிய பக்ரீரியாவான "ஜியோபேக்டர் மைக்ரோப்ஸ்" கிழக்கு அமெரிக்காவின் பொடோமாக் நதிக்கரையில் உள்ளது.

மைக்ரோப்கள் மூலம் எப்படி மின்சாரம் உருவாகிறது என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்றும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

தற்போது மனிதக்கழிவு மீண்டும் பூமிக்கே கொண்டு வரப்படுகின்றது. ஆனால் மனிதக்கழிவு நீரகளான சிறுநீர்,வியர்வை போன்றவை மீள் பயன்பாடு செய்யப்பட்டு குடிநீராகப் பயன்படுத்தப்படுகிறது.

எப்படியும் இதைப் பயன்படுத்திதான் ஆகவேண்டும். அதை ஒரு சக்தி இழப்பாகப் பயன்படுத்துவதற்குப் பதில் எரிசக்தி உருவாக்குவதற்காக ஏன் பயன்படுத்தக் கூடாது என்று இதுபற்றி ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். (க-9)

# சிறுவர் அரங்கம்



## தெரிந்து கொள்ளுங்கள்

- உறிஞ்சிக் குடிக்கும் தன்மை உடைய பறவை - மயில்
- மிக மெதுவாகப் பறக்கும் பறவை - அமெரிக்கா உட்காக்
- இறந்தது போல் இருக்கும் விலங்கு - அபோஸம்
- பறவை போல் வெகுதூரம் செல்லும் விலங்கு -ஒட்டகம்
- மனேசாரின் இன விலங்குகள் தற்போது காணப்படும் இடம் - தாய்லாந்து
- பறவைகளிலேயே மிக நீளமான நாக்குக் கொண்டது - மரங்கொத்தி
- பறவைகளைப் பற்றி படிக்கும் படிப்பு - ஆர்னிதாலஜி
- கோ ஆலோ என்ற மிருகம் உள்ள நாடு - ஆஸ்திரேலியா.

சொ. நித்தியா,
கொக்குவில்.

## இவை உங்களின் ஓவியங்கள்



ச. நிஷாந்தன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



சு. நிகேதினி
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

## முயற்சியே முன்னேற்றம்!

கொட்டிக்கொண்டே இருக்கிறது குதித்து வீழும் பேருவி!
ஓடிக்கொண்டே இருக்கிறது ஒவ்வொரு கணமும் பல நதிகள்!
துடித்துக்கொண்டே இருக்கிறது துல்லியமாக நம் இதயம்!
ஒலித்துக்கொண்டே இருக்கிறது உயர்ந்து புரளும் கடல் அலைகள்!
நகர்ந்துகொண்டே இருக்கிறது நம்மைச் சுற்றும் காற்றுவெளி
உருண்டுகொண்டே இருக்கிறது உன்னதமான இவ்வுலகம்!
இயங்கிக்கொண்டே இருப்பதுதான இயற்கை நியதி என அறிவோம்!
முயற்சி முயற்சி இதுவேதான் முழுவதும் வாழ்க்கை எனத் தெளிவோம்!

## நாடுகளின் தேசிய சின்னங்கள்

*இந்தியா - சிங்கத் தலைகள்
*பாகிஸ்தான - பிறைச்சந்திரன்
*ஆஸ்திரேலியா - கங்காரு
*கனடா - வெள்ளை லில்லி
*டென்மார்க் - கடற்கரை
*ஜேர்மனி - மக்காச்சோளம்
*ஈரான் - ரோஜாப்பு,
*அயர்லாந்து - சாம்ராக்
*அமெரிக்கா - தங்கக்கோல்
*ஸ்பெயின் - கழுகு

சு. விதுஷன்,
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.


> திறமையையும் மிஞ்சி விடக்கூடிய ஆற்றல் நிலையான பயிற்சிக்கு உண்டு.
>
> -செனிகா

## பிச்சைக்காரனும் தங்க நாணயமும்

ஒரு பிசசைக்காரன உணவுககாக வீடு வடாக அலைந்தான்.

அவன் மிகவும் அசிங்கமாகக் கிழந்த உடைகளோடு சிககுப் பிடிதத தலைமுடியோடு இருந்தான்.

ஒரு பழைய கோணிப் பையே அவனுக்கு உடமையாக இருந்தது. ஒவ்வொரு வடாகப் போய் பார்த்துவிட்டு எதுவும் கிடைக்காவிட்டால் தனக்குள் அந்த வீட்டைப் பற்றி சொல்லிகொள்வான்.



ஒரு வீட்டின் முன்னே போய் அவன் சொன்ன வார்த்தைகள்,

"வீடு மிகப் பெரியது. ஆனால் இங்குள்ளவர்களுக்குப் பணம் நிறைய இருந்தும் திருப்தியில்லை. அவர்கள் எப்போதும் அதிகமாகவே எதிர்பார்க்கிறார்கள். கடைசியல் அவர்கள் பேராசையால் எல்லாவற்றையும் இழப்பார்கள்"

இன்னொரு வீட்டிற்குப் போனான். உணவு கிடைக்கவில்லை.

"இந்த வீட்டில் உள்ளவன் கோடீஸ்வரன். ஆனால் இருக்கிற பணத்தில் திருபதியடையாமல் அவற்றை இரட்டை மடங்காக்கச் சூதாடினான. கடைசியல் எல்லாவற்றையும் இழந்தான். எனக்கோ கொஞ்சப பணம் கிடைத்தால போதும். தருப்தி கொள்வேன். அதிக ஆசைப்பட மாடடேன்" என்று அந்தப் பிச்சைக்காரன் சொனனதும் அதிஷட தேவதை அவன் முன்னே தோனறினாள்.

"நான், உனக்கு உதவப் போகிறேன். நீ உன்னுடைய கோணிப்பையைப் பிடி நான் அதனுள்ளே தங்க நாணயங்களைப் போடுவேன். உனககு எவ்வளவு வேண்டுமோ பெற்றுக்கொள்" என்றது.

பிச்சைக்காரன் அதிஷட தேவதையைப் பார்த்தான். அவள கரங்களில் தங்க நாணயங்கள் நிறைய இருந்தன. உடனே அவன் கோணிப் பையை விரித்தான். அபபோது அதிஷ்ட தேவதை சொல்லியது,

"கோணிப்பையில் விழுகிற நாணயங்கள் தங்கமாக மாறும். அவை நிலத்தில் விழுந்தால் தூசியாகிவிடும். இது எனது எச்சரிக்கை"

பிச்சைக்காரன் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தான். அதிஷ்ட தேவதை மீண்டும் எச்சரித்தது. அதன் பிறகு பிசசைக்காரனின கோணிப்பையினுள் தங்க நாணயங்களைக் கொட்டியது. கோணிப்பை நிரம்பியதும் அதிஷட தேவதை தங்க நாணயங்களைக் கொட்டுவதை நிறுத்தியது.

"உன் கோணிப்பையில் இருக்கிற நாணயங்கள் உன்னை அரசனை விட பணக்காரனாக்கும். இது போதும் தானே" என்றது அதிஷ்ட தேவதை.

"போதாது. இன்னும் வேண்டும்" என்றான் பச்சைககாரன். அதஷட தேவதை மேலும் சில தங்க நாணயங்களைக் கொடுத்துவிட்டுச் சொன்னது,

"உன் கோணிப்பை இதற்கு மேல் தாங்காது" பிச்சைக்காரன் சொன்னான்,

"இன்னும் கொஞ்சம் வேண்டும்"

அதிஷ்ட தேவதை மேலும் தங்க நாணயங்கள் சிலவற்றைக் கொடுத்துவிட்டு நிறுத்தியது.

"உன் கோணிப்பை கிழியப் போகிறது"

பிச்சைக்காரன் மறுத்தான்

"இல்லை... நீ இன்னும் கொஞ்சம் நாணயங்களைப் போடு! என் கோணிப்பை தாங்கும்..."

மறு வினாடி கோணிபபை கிழிந்தது. அதனுள் இருநத தங்க நாணயங்கள் கீழே விழுந்து தூசியாகின. அதிஷ்ட தேவதையும் மறைந்தது. பிச்சைக்காரன் திகைத்துப்போய் நின்றான்.

## விடுகதைகள்

1. இரவில் கண்சிமிட்டும் நட்சத்திரம் அல்ல. அது என்ன?
2. பகலில் துயில்வான் இரவல் அலறுவான். அவன் யார்?
3. நெட்டையன் குட்டக் குட்ட கட்டையன் சும்மாயிருக்கிறான். அவன் யார்?
4. பறக்காத பச்சைக் கிளி, காம்பிலே தூங்குது. அது என்ன?
5. சாவி கொடுத்தால் ஓசை கொடுத்து எழுப்புவான். அவன் யார்?
6. வெள்ளைக்காரன் வெளிச்சம் தந்தான் இருந்த இடத்தில் ஆளைக் காணோம். அவன் யார்?

லோ. அபிராமி,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## ஒளிந்திருப்பவர் யார்?

சிறுவர்களே! இங்கே ஏதோ ஒரு உருவம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அது என்னவாக இருக்கும்? 1முதல் 49 வரையுள்ள எண்களைப் பென்சிலால் கோடு இழுத்துப் பாருங்கள் தெரிந்துவிடும்.



## புதிர்

ஒரு குளத்தில் ப,க்கள் இருந்தன. ப,க்களில் குருவிகள் ஒவ்வொன்றாக இருக்க 1 குருவி மிச்சம். ஒரு பூவில் இரு குருவிகளாக இருக்க ஒரு ப, மிச்சம். அப்படியானால் குளத்தில் உள்ள ப,க்கள் எத்தனை? குருவிகள் எத்தனை?

## இரு கை சாதனையாளர்கள்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் ஏ.கார்பீல்டு ஒரு கையால் லத்தீன் மொழியால் எழுதக்கொணடே மற்றொரு கையால கிரேகக மொழியில் எழுதக்கூடியவராம்.

அதேபோல் மோனலிசா ஓவியம் தீட்டிய லியானார்டோ டாவின்சியும் ஒரு கையால் ஓவியம் தீட்டிக்கொண்டே இன்னொரு கையால் எழுதக்கூடியவராம்.

புதிர் விடைகள்

பூக்கள் - 03 குருவிகள் - 04

விடுகதைகள்

1.மின்மினிப்பூச்சி 2.வௌவால் 3.உலக்கையும், உரலும் 4.மாங்காய் 5.கடிகாரம் 6.கற்பூரம்

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல் - குறள்

வலம்புரி

# ஏழைகளுக்கு உதவும் தினமாக புத்தாண்டை கொண்டாடுவோம்

நாளை மறுதினம் தமிழ் - சிங்களப் புத்தாண்டு மலர்கின்றது. புத்தாடை உடுத்தி புதுப் பொலிவுடன் தம் வாழ்வியலை ஆரம்பிக்கின்ற திருநாளே புத்தாண்டாகும்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற பழமொழிக்கு அமைவாக துன்பங்களை சதா நினைவிருத்திக் கொள்ளாமல், அவற்றை மறந்து புதிய பாதையில் புதிய பயணத்தைத் தொடர்வதாக புத்தாண்டின் நுழைவாயில் அமைகின்றது.

உலகில் வாழும் மக்கள் கூட்டம் இன, மத, நிற, மொழி வேறுபாடுகளால் தங்களுக்குள் தாங்கள் அடிபட்டுக் கொள்ளும் துயர நிகழ்வு எங்கும் நடைபெற்ற வண்ணமுள்ளது.

இதற்கு அப்பால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் - முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க வேறுபாடும் மனித இனத்திற்குள் மோதலை ஏற்படுத்தி விடுகின்றது.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற தமிழ் வாசகத்தை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் அதற்குள் இருக்கக்கூடிய ஆழமான அர்த்தங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்த மண்ணில் வாழப் பிறந்த மக்கள் வரட்டுக் கௌரவங்களை - மூடநம்பிக்கைகளை மையமாகக் கொண்டு தமது நிம்மதியை இழந்து விடுகின்றனர்.

வீட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, அன்புடைமை, இரக்கம் என்பன மனிதத்திற்குள்ளிருந்து விலகிப்போக இப்போது போட்டி, பொறாமை, காட்டிக் கொடுப்பு என்பன மேலெழுந்துள்ளன.

இதன் விளைவே உலகில் நடைபெறும் யுத்தங்களுக்கும், வன்முறைகளுக்கும் அடிப்படைக் காரணமாகும்.

நான் மட்டும் வாழவேண்டும். நான் மட்டும் இந்த உலகில் அதிகாரங்களைக் கைகளில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற நினைப்பே உலகில் புரட்சி வெடிப்பதற்கு ஏதுவாக அமைந்து விடுகின்றது.

ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகக் கூறிக்கொண்டு அந்த நாட்டுக்குள் நுழைந்த அமெரிக்கா, ஈராக்கை அழித்தது. அத்துடன் அங்கு இருக்கக்கூடிய எண்ணெய் வளத்தையும் சுரண்டியது.

சதாம் உசேனுடன் ஏற்பட்ட ஆத்திரத்திற்காக ஒரு நாட்டை அழிப்பது, அந்த நாட்டு மக்களைக் கொலை செய்வது, பொருளாதார வளங்களைக் சூறையாடுவது போன்றவை, அமெரிக்காவின் உள்ளார்ந்த நோக்கை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

எனவே, உலகில் நீதி, நியாயம் ஏற்பட வேண்டுமாயின் முதலில் மக்கள் சமூகம் தன்னளவில் அன்பு, இரக்கம், கருணை என்ற சாந்த குணங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

இத்தகையதோர் சாந்தத்தை மனிதர்களிடையே உருவாக்குவதற்காக நம் ஆன்றோர்கள் நிர்ணயித்தவையே புத்தாண்டு, தைப் பொங்கல், நத்தார், மீலாத் போன்ற விழாக்களாகும்.

இந் நாளில் நம் அயல் சார்ந்த ஏழைகளுக்கு புத்தாடை வழங்கி இனிய தின்பண்டங்கள் கொடுத்து அவர்களின் முகங்களில் சிரிப்பைக் காண்பதன் மூலம் பூரிப்படைவதே உண்மையான நோக்கமாகும்.

அவ்வகையில் நாளைமறுதினம் மலரப் போகும் தமிழ் - சிங்களப் புத்தாண்டில் ஏழை மக்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்வோம். பூரிப்படைவோம் என உறுதி கொள்வோமாக.

# வீடமைப்பு, நிவாரண உதவி தொடர்பான அரச தீர்மானங்கள் சுவரொட்டி மூலம் அறிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகளை புதிதாக அமைத்துக் கொடுப்பது மற்றும் நிவாரண கடன் உதவிகளை வழங்குவது தொடர்பான தீர்மானங்கள் குறிப்பிடப்பட்ட சுவரொட்டியை நகர அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டு பாதிக்கப்பட்ட இடங்களில் மக்கள் பார்வைக்காக ஒட்டியுள்ளது.

சுவரொட்டியில் குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை அரசாங்கம் புனரமைக்கும்போது கடலோர பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட பாதிக்கப்பட்ட வீடுகளை மீளமைக்காது அதற்கு பதிலாக 500 சதுர அடி பரப்புள்ள பழைய இடத்திற்கு சமீபமாக முற்றிலும் இலவசமான வீடொன்றை கட்டிக்கொடுக்கும். திட்டமிடப்பட்டுள்ள வீடுகள் நகரத்திற்கு கிராமத்திற்கு ஏற்ற விதத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் மின்சாரம், நீர், புனரமைப்பு போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் வீதி அபிவிருத்தியையும் கொண்டதாக அமையும்.

மேலும் கடலோர பாதுகாப்பு வலயத்திற்கு உட்படாத சுனாமியினால் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களின் சொத்துக்கள் அரசாங்கத்தின் திட்டவரைபின்படி புனரமைக்கப்படும்.

அதாவது கடலோர பாதுகாப்பு வலயத்திற்கு உட்படாது. முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா 4 கட்டங்களாகவும் பகுதியாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபா இரண்டு கட்டங்களாகவும் வழங்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட அனைத்து வீட்டு உரிமையாளர்களும் வீட்டு நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்தபின் அரசாங்க வங்கிகளில் ஐந்து இலட்சம் ரூபா வரை சலுகை கடன்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கடன் திட்டம் பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ள அருகில் உள்ள இலங்கை வங்கியினை அல்லது மக்கள் வங்கியினை நாடலாம்.

மேலும் இலங்கை அரசாங்கம் கடலோர பாதுகாப்பு மற்றும் மரநடுகை, மீன்பிடி தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட துறைமுகங்கள், நங்கூரத் தளங்கள், களஞ்சியங்கள் மற்றும் உபகரணங்களின் அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய நடவடிக்கைகள், வரலாற்று மற்றும் அகழ்வாராய்ச்சிகள், அ... உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றைத் தவிர வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கடலோர பாதுகாப்பு வலயத்தில் மேற்கொள்வதில்லை என தீர்மானித்துள்ளது. (க-10)

## பனைவளத்தை பாதுகாக்க சகலரும் முன்வர வேண்டும்

## கரிகாலன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் கற்பகதருவாம் பனை வளத்தை அழிவிலிருந்து காப்பாற்ற அனைவரும் முன்வர வேண்டுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தலைவர் சி. கரிகாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்,

எமது தேசத்தினதும் எமது இனத்தினதும் அடையாளச் சின்னமான பனைவளம் திட்டமிட்ட வகையிலும் வீட்டுத் தேவைகளுக்குமென எமது மக்களால் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டு வருகின்றது.

சுனாமி போன்ற இயற்கை அனர்தங்களினாலும் இந்த வளம் பெருமளவில் அழிவுற்ற நிலையில் இந்த வளத்தினை மேலும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு தமிழ்க் குடிமகனினதும் கட்டாய தேவையாகும்.

அந்த வகையில் வேண்டியது தமிழ்த் தேசத்தில் பணிபுரியும் அரச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், துறைசார் பொறுப்பதிகாரிகள், பொதுமக்கள் என சகலரும் இது விடயத்தில் அதிகூடிய கவனம் செலுத்தி பனைவளத்தினை அழிவிலிருந்து பாதுகாக்க அக்கறையுடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, கட்டட நிர்மாணங்களுக்கு இடையூறாக இருக்கும் பனைவளங்கள், குடிமனைகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பனைமரங்கள், பட்ட நிலையில் இருக்கும் பனைமரங்கள் போன்ற பனைமரங்களையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேச இணைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு மாவட்டப் பொறுப்பாளர்களின் அனுமதியுடன் தறிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று கேட்டுள்ளார். (க-7)

## சங்கீத சபை நடாத்தும் செயன் முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் சங்கீத பாடநெறிகளில் தரம் 1 தொடக்கம் 4 வரையான சங்கீத வகுப்புக்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நடைபெறுமென வடஇலங்கை சங்கீதசபையின் தலைவரும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த செயல்முறைப் பரீட்சை வயலின், மிருதங்கம, வீணை, வாய்ப்பாட்டுச் சங்கீதம் நடனம், நாடகம் ஆகிய பாடங்களுக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளான திருகோணமலை, முல்லைத்தீவு மட்டக்களப்பு கல்முனை, வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு இப்பரீட்சை யூன் மாதத்தில் நடைபெறவுள்ளது.

ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு குறிப்பிட்ட தினங்களில் செய்முறைப் பரீட்சைகள் இடம்பெறுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-9)

## வெளிநாட்டு உதவிகள் கிடைத்தும் மக்களுக்கு பலன் எதுவுமில்லை

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டு உதவிகள பெருமளவு கிடைத்துள்ள போதிலும் அதன் பலாபலன்கள் மக்களுக்கு கிடைக்கவில்லையென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்திக கொள்வதற்கு அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இது அரசாங்கத்தின் அக்கறையின்மையையே எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

இதேவேளை, அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதன் காரணமாக உள்ளூர் யுத்தத்துக்கு முடிவு காணப்பட்டுள்ளது. இதன் பலனாக யுத்தத்துக்குப் பயன்படுத்தப்பட்ட நிதி மீதமாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-8)

## சட்டவிரோதமாக இயங்கி வந்த மதுபான வடிசாலைகள் கண்டுபிடிப்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு ஏரிக்கு அருகாமையில் இயங்கிவந்த இரண்டு பாரிய சட்டவிரோத மதுபான வடிசாலைகளை வலப்பன பாணந்துறை ஊழல் தடுப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

பொலிஸ் பொறுப்பதிகாரி விஜிதபெரேரா இது தொடர்பாகத் தகவல் தெரிவிக்கையில்,

பண்டிகைக் காலத்தின் போது சந்தைகளுக்கு அனுப்புவதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை மதுபானங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (க-7)

## மக்களை திசை திருப்புவதற்கு எதிர்த் தரப்பினர் முயற்சி!

(கொழும்பு)

எதிர்த் தரப்பினரின் தந்திரோபாயங்களை அறிந்து பொறுப்புடன் கடமையாற்ற வேண்டியிருப்பதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சமாதான முயற்சிகளை சீர்குலைப்பதற்கு சிலர் முயற்சி செய்வதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர் நிறுத்த ஒப்பந்தமொன்று கடைப்பிடிக்கப்படுகின்ற இக் காலப்பகுதியில் நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கை எல்லோர் மனதிலும் காணப்படுகிறது.

இந்த நம்பிக்கையை சிதைத்து அவர்களை பலவீனமடையச் செய்து திசைதிருப்ப சிலர் சில இடங்களில் தேவையற்ற தடைகளை மேற்கொள்ளுகின்றனர்.

நாம் செல்லும் சரியான பாதையிலிருந்து எம்மை விலகிச் செல்லச் செய்வதற்கு முயற்சி செய்கின்றார்கள். இதனால் எதிரியின் தந்திரோபாயங்களைப் புரிந்து கொண்டு பொறுப்புடன் நடக்க வேண்டிய ஒரு கடப்பாடு எமக்குண்டு என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-7,8)

## வீடுகளை இழந்தவர்களுக்கு முதல் கட்டக் கொடுப்பனவு

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் வீடுகளை இழந்தவர்களுக்கான முதல் கட்டக் கொடுப்பனவு கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் அறிவித்துள்ளன.

பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களிடமிருந்து 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. முழுமையாக அல்லது பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை 100மீற்றர் கடற்பிரதேசத்திற்கு அப்பால் நிறுவுவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த முடியும்.

முழுமையாக வீடுக்ள் சேதமடைந்தவர்களுக்கு 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பகுதியளவில் சேதமடைந்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதில் முழுமையாக சேதமடைந்தவர்களுக்கு முதற்கட்டமாக 70 ஆயிரம் ரூபாவும் பகுதியளவில் சேதமடைந்தவர்களுக்கு 50ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றது. (க-8)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

அண்டசாரசரங்களிலும், உயிரினங்கள், உயிரற்றவை ஆகிய எல்லாவற்றிலும் இறைவன் வியாபித்துள்ளான். அவனன்றி ஏதுமில்லை. அவனே அனைத்தும் ஆவான். நாம் அவனைப் பார்க்க முடியாததால் பொருட்களையே காண்கிறோம். ஆனால் அவனே எல்லாம் என்பது தான் உண்மை.

சுவாமி விவேகானந்தர்

# உயர்தர வெளிவாரிப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் வெளிவாரிப் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்ப முடிவுத் திகதி ஏற்கனவே ஏப்ரல் 10 ஆம் திகதி யென அறிவிக்கப்பட்டிருந்தது.

காசுக்கட்டளையுடன் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவம் அடங்கிய கடிதஉறையின் மேல்மூலையில் 'க.பொ.த(உ.த) பரீட்சை 2006' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பம் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களுக்கு தலா ரூபா 100 உம், பதிவுக் கட்டணம், மதிப்பீட்டுக் கட்டணம், நிறுனத்துவக்கட்டணம் என்பவற்றிற்கு தலா 100 ரூபாவும், மேற்பார்வைக் கட்டணமாக 75 ரூபாவும் செலுத்தப்படவேண்டும். (ச)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(பொன்னாலை)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தையடுத்து முற்பகல் 11.30 மணிக்கு விவசாயிகள்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ச-49)

# விசா இல்லாத 37 இலங்கையர்கள் சவுதியிலிருந்து அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள இலங்கைப் பிரஜைகளினால் அரசாங்கம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாக தொழில் மற்றும் வேலைவாய்ப்பு நலன்புரி அமைச்சர் அதாவுட செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

சவுதிஅரேபியாவில் தங்கியிருந்த 37 இலங்கையர்கள் திருப்பியனுப்பி வைக்கப்பட்டமை குறித்துக் கேட்கப்பட்டபோது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

14 பெண்கள் உட்பட 37 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் சவுதி அரேபியாவிலிருந்து திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். விசா காலாவதியான நிலையில் தங்கியிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சவுதி அரசாங்கத்தினால் அவர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்கள்.

தாயகம் திரும்பிய இவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் பொறுப்பேற்று அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதேவேளை விசாமுடிவடைந்து தொடர்ந்து சவுதி அரேபியாவில் தங்கியுள்ளவர்கள் குறித்து ஆராய்ந்து அது தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்றினை அனுப்புமாறு இலங்கைத் தூதுவரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சவுதி பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-8)

# சமாதானத்தை வலியுறுத்தி...

ஆரம்பமாகி நகரசபை மைதானத்தில் முடிவடைந்தது.

இப் பேரணியில் முடிவில் ஜனாதிபதிக்கும், நோர்வே இராஜ தந்திரிகளுக்குமான மனுக்கள் முறையே வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமும், போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடமும் கையளிக்கப்பட்டன.

சமாதானத்தை வலியுறுத்தும் பதாகைகள் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன. வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்துப் அமைப்புகளினதும் பிரதிநிதிகளும், முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் இப் பேரணியில் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டனர்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தபோதிலும் சமாதான முயற்சிகள் மந்த நிலையிலேயே உள்ளன. மாறாக மீண்டும் யுத்தம் ஏற்படுமோ என்ற பீதியே மக்கள் மனங்களில் குடிகொண்டுள்ளது என்று வெகுஜன ஒன்றியம் பேரணியினை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ச)

# தேசிய எழுச்சி பேரவையின் விசேட கூட்டம்

(புங்குடுதீவு)

தீவகக்கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான விசேட சந்திப்பொன்று இன்று காலை 9 மணிக்கு வேலணைப் பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் தலைமையக அதிகாரிகள் இதில் கலந்துகொள்ளவுள்ளதால் தீவகக் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-46)

# கூட்டம்

(பொன்னாலை)

தீவகம் வடக்கு ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கூட்டம் இன்று காலை 10 மணிக்கு அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் க.சிறிமோகன் கேட்டுள்ளார். (ச-49)

# சடலம் மீட்பு

(கொழும்பு)

அனுராதபுரம் வாகொல்லாகட கிம்புலாப்பிட்டியான எனும் இடத்தில் பழுதடைந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை கடற்படை முகாமைச் சேர்ந்த சோமபாலகே சமன்குமார (வயது 20) என்ற கடற்படை வீரரின் சடலமே இதுவென அவரின் உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இவர் கடந்த 29 ஆம் திகதி முதல் காணாமல்போயுள்ளதாக திருமலை கடற்படை முகாமினால் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தது. (ச)

# சுனாமி பற்றிய...

இது தொடர்பாக பிராந்திய நாடுகளுக்கான கூட்டத்தில் கலந்துகொள்ளவென ஜனாதிபதி குமாரதுங்க தலைமையில் ஒரு குழுவினர் செல்லவுள்ளனர். பாராளுமன்றில் தேசிய அனர்த்த முகாமைத்துவ குழுவில் அங்கத்துவம் வகிக்கும் எம்.பிக்களும் வேறு சிலரும் இவர்களுடன் வெளிநாட்டுக்கு செல்லவுள்ளனர்.

இதுபற்றி சுற்றாடல்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவிக்கையில், இது விடயத்திற்கு நான் அமைச்சராக இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தன்னுடன் கலந்துரையாடாமல் சென்றுள்ளனர் என வருத்தம் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவினர் யுனெஸ்கோ நடத்தும் கூட்டத் தொடருக்கும் செல்லவுள்ளனர். (06)

# உயிரோடு இருந்தபோது....

தெய்வீக அருள் அவரைக் குணப்படுத்தியதாக இத்தாலியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

1998 ஆம் ஆண்டு இந்த அற்புதம் நடந்துள்ளது. பாப்பரசரின் நீண்டகால செயலாளராக இருந்த பேராயர் ஸ்ரனிஸ் மோவை ஆதாரம்காட்டி இத்தாலிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. வத்திக்கான் வரலாற்றில் ஏனைய பாப்பரசர்களை விடவும் இவர் பொதுமக்களை சந்திப்பதிலும், அருளாசி வழங்குவதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவை தவிரவும் பரம எதிரிகளாக இருக்கின்ற ஈரான், இஸ்ரேல் ஜனாதிபதிகள் தமது பகைமையினை மறந்து இறுதி ஆராதனையில் ஒருவரை ஒருவர் பார்த்து புன்முறுவல் பூத்ததுடன் கைலாகு கொடுத்திருக்கின்றனர்.

அதேபோன்று சிம்பாப்வே ஜனாதிபதி மொகாபே இளவரசர் சாள்ஸுக்கு கைலாகு கொடுத்து தனது அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இவ்வாறு மேலும் பல பகைமை நாடுகளின் தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்த பெருமை வத்திக்கான் புனித இராயப்பர் சதுக்கத்திற்கேயுரியது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பரிசுத்த பாப்பரசர் 1995 ஆம் ஆண்டு இலங்கை மண்ணில் கால்பதித்தபோது பலத்த மழைபெய்தமை நினைவூட்டப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க பாப்பரசரின் இறுதி ஆராதனையின்போது அவருக்கு புனித பட்டம் வழங்க வேண்டுமென அங்கு கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் ஆர்ப்பரித்ததாக மேலும் தெரியவருகிறது.

பாப்பரசர் அருட்கரம் ஆற்றிய அற்புதங்கள் அவரது மறைவைத் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

# எரிபொருட்களின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் அறிவித்தலின்படி ஒரு பீப்பா மசகு எண்ணெய் நூறு டொலர்களாக அதிகரித்துள்ளது.

தற்போதுள்ள நிலையில் எரிபொருளுக்காக கடந்த 3 மாதங்களில் அரசாங்கத்திற்கு 378 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக 60 வீத எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில் எரிபொருளில் விலையில் ஏற்படும் அதிகரிப்பானது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (த-8)

# போட்டியில் காயம்

(புங்குடுதீவு)

உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய வீரர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலையத்தால் புதுவருடத்தினை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம், புங்குடுதீவு சனிஸ்ரார் விளையாட்டுக்கழகமும், புங்குடுதீவு கத்தோலிக்க விளையாட்டுக் கழகமும் மோதின.

இதன்போது சனிஸ்ரார் விளையாட்டுக்கழக வீரர் வி.சிவகுமார் (வயது 26) என்பவர் காயமடைந்தார். (ச-126)

# கருணா...

கண்காணிப்பாளர் அங்கு சென்று பார்த்தபோது கருணா குழுவின் முகாம்கள் இருந்ததற்கான தடயங்கள் எதுவும் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணையின்போது சாட்சியமளித்த மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் ஸ்டீன் ஜோர்சன் தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாமிருப்பது உண்மை என சாட்சியமளித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

# ஈ.பி.டி.பி...

கொண்டிருந்தபோது கல்கிசை வீதியில் வைத்து இனந்தெரியாத நபரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் திருகோணமலை ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

# யாழிலிருந்து மகனுடன்....

பறிமுதல் செய்த பின்னர் அவரை சுட்டுவிட்டு தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

உப பொலிஸ் சேவையில் பணியாற்றிய இவர் சில வருடங்களுக்கு முன்னர் அதிலிருந்து விலகி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திலும் பொலநறுவை மாவட்டத்திலும் இவ்வருடம் 40 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் கைக்குண்டு வீச்சு சம்பவங்கள் என்பன இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடையாளம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களில் பொதுமக்கள் உட்பட 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)


மனோகரா யாழ்.
பார்த்திபன், காவேரி, வான்ரா அல்லின் நடித்த கண்ணாடிப் பூக்கள்
தனுஷ், ஸ்ரீதேவி நடித்த தேவதையைக் கண்டேன்
கா.நேரம்: 10.30, 2.30, இரவு 6.30, 9.30 இற்கு
சித்திரை புத்தாண்டு வெளியீடாக






ரிக்கெற் முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

குளிரூட்டப்பட்ட
நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்






கா.நேரம்: 10.30, 02.30, 06.30, 09.30 (பு.நே)
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நிரஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந், சூசன், மஹிமா, செந்தில் நடித்த
நெறஞ்சமனசு
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)



BANK OF CEYLON

இலங்கை வங்கி

மங்களம் எங்கும் பொங்குக என இலங்கை வங்கி தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது

புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கைவங்கியின் சகல கிளைகளும் 14.04.05 வியாழக்கிழமையன்று காலை 8.00 மணியிலிருந்து மு.ப. 11.00 மணிவரை திறந்து வைக்கப்படும்

அன்றையதினம் வைப்புக்களுக்குக் குலுக்கல் முறையில் பரிசுகள் காத்திருக்கின்றன

அன்றுபோல் இன்றும் எம்மோடு இணைந்து வளம்பெற வாருங்கள்

முக்கிய அறிவித்தல்:

எமது சாவகச்சேரி, காங்கேசன்துறைக் கிளைகளில் முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட நகை அடகுசேவையும் அன்றையதினம் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

(சி-1225)



பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை. சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் (யாழ். நகரமையத்திலிருந்து 6.கி.மீ. தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும்) 18-04-2005 திங்கட்கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
வலம்புரி


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.